விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper In Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 214 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 04 சனிக்கிழமை (20.07.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

### 22ஆவது திருத்தம் வர்த்தமானி வெளியீடு

# ரணில் - விஜயதாஸ இடையே முறுகல் நிலை முற்றியது



## நீதியமைச்சரின் பணிப்புரையை மீறி நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்திய ஜனாதிபதி

(கொழும்பு)

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவின் பணிப்புரையை மீறி தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி 22 ஆவது திருத்தச் சட்டத்தை வர்த்தமானியில் வெளியிட்டார் ஜனாதிபதி ரணில்.

(15ஆம் பக்கம் பார்க்க)



## தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் காலமானார்



15

### காங்கேசன்துறையில்

## இந்தியாவின் உல்லாசக் கப்பல்



(யாழ்ப்பாணம்)

சென்னையில் இருந்து பயணிகள் 15

### 22ஆவது திருத்தம் குறித்த வர்த்தமானி அறிவித்தலால்

## ஜனாதிபதித் தேர்தல் நடப்பது தடைப்படாது



### தேர்தல்கள் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்தநாயக்க

(கொழும்பு)

அரசமைப்பின் 22வது திருத்தம் குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளதன் காரணமாக ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது தடைப்படாது எனத்தேர்தல்ஆணையாளர் நாயகம் சமன் 16

## வவுனியாவில் திடீரென உடைந்து வீழ்ந்த வீடு

### அதிர்ஷ்டவசமாக தப்பிய இருவர்

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் சிறிநகர்ப் பகுதியில் வீடு ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை உடைந்து வீழ்ந்த நிலையில் அதிர்ஷ்டவசமாக இருவர் உயிர் பிழைத்தனர்.

குறித்த வீட்டில் நேற்று வெள்ளிக்கிழமை மதியம் கணவனும் மனைவியும் தங்கியிருந்துள்ளனர்.

இதன்போது வீடு 15

## யாழில் இருந்து கதிர்காமம் பயணித்த பேருந்து விபத்து

### 50க்கும் மேற்பட்டோர் காயம்



15

## ஒரேயொரு தேர்தல் மட்டுமே இவ்வருடம் நடத்தப்படும்

### அமைச்சர் பந்துல குணவர்த்தன



(கொழும்பு)

இவ்வருடம் ஒரேயொரு தேர்தல் மட்டுமே நடத்தப்படும் என நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

15

### ஜனாதிபதித் தேர்தலில்

## அரச உத்தியோகத்தர்கள் கண்காணிக்கப்படுவர்

### மனித உரிமைகள் ஆணைக்குழு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது அரச உத்தியோகத்தர்களின் செயற்பாடுகளை உன்னிப்பாக கண்காணிப்பதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் குறித்து அறிவிப்ப 16

### ஊர்காவற்றுறையில் பசு மாட்டை இறைச்சிக்காக வெட்டியவர் கைது

(யாழ்ப்பாணம்)

பசு மாட்டை இறைச்சிக்காக வெட்டிய குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் வெட்டுவதற்கு தயாராக இருந்த காளை மாடு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம்நேற்று 15

### பரீட்சைக்குச் செல்ல மறுத்த மாணவி

## விபரீத முடிவெடுத்த தாய் உயிரிழப்பு

### பண்டத்தரிப்பில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

பரீட்சைக்குச் செல்ல மாணவி மறுப்புத் தெரிவித்ததால் விபரீத முடிவெடுத்த தாய் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

பண்டத்தரிப்பில் இச்சம்பவம் இடம் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் கூட்டணி

## தன்னாட்சி - தற்சார்பு - தன்னிறைவு

# முதலாவது தேசிய மாநாடு

## 21-07-2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணி

## தந்தை செல்வா அரங்கத்தில்

-யாழ்.மத்திய கல்லூரிக்கு அருகில்-

## அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்

**நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன்**

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் - யாழ்.மாவட்டம்,
முன்னாள் முதலமைச்சர் - வடக்கு மாகாண சபை,
செயலாளர் நாயகம் - தமிழ் மக்கள் கூட்டணி

(C-826)


# மரண அறிவித்தல்



மலர்வு
1968.08.05

உதிர்வு
2024.07.17

## திருமதி சுமதி ஜெயரட்ணம் (கட்டி)

**இமையாணன் கிழக்கு உடுப்பிட்டி**

**(ஜனா சிவில் வேக்ஸ் (கட்டட ஒப்பந்தகாரர்), ஜனா ஹாட்வெயார், துர்க்கா மரக்காலை - நெத்தலியாறு விசுவமடு. உரிமையாளரின் அன்பு மனைவி)**

யாழ் உடுப்பிட்டி, இமையாணன் கிழக்கை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சுமதி ஜெயரட்ணம் அவர்கள் கடந்த 2024.07.17 புதன்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் நல்லையா - பூமணி தம்பையா தம்பதியினரின் தவப்புதல்வியும், தவமலர், தவமணி மற்றும் அமரர்களான பூரணம், பரமேஷ்வரி ஆகியோரின் பெறாமகளும் காலஞ்சென்றவர்களான இராசா - சின்னக்குட்டி தம்பதியினரின் மருமகளும், இராசா ஜெயரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், நிதர்ஷனன்(ஜனா-லண்டன்), துர்க்கா (சிங்கப்பூர்), கீர்த்தனா (JSAC நிறுவனம், யாழ்ப்பாணம்), தாட்சாயினி(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுவர்ணப்பிரதா(லண்டன்), கதீஷ்(சிங்கப்பூர்), திருமாறன் (சுகாதார அமைச்சு, வடமாகாணம்), சதீஸ்வரன்(கனடா) ஆகியோரின் மாமியாரும், சுரேன்(இமையாணன்), அகிலன் (புதுத்தோட்டம்) ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் நவரத்தினம் கேசவனின் மாமியும் ஜெய்த்ரன், ஜெய்த்விக் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 2024.07.21 ஞாயிற்றுக் கிழமை இமையானண், "ஜெய்பவன்" எனும் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10 மணியளவில் தகனக் கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

077 600 0970, 077 935 8248
00447796346757 - ஜனா (லண்டன்)

தகவல் :
குடும்பத்தினர்

(C-825)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்களிடையே அதிகரிக்கும் நீரிழிவு-சுகாதாரத்துறை எச்சரிக்கை

(கொழும்பு)

கடந்த 10 ஆண்டுகளில் கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் சிறு குழந்தைகளிடையே நீரிழிவு நோய் பாதிப்பு அதிகரித்துள்ளதாக சுகாதாரத் துறையினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தற்போது நகர்ப்புறங்களில் வசிக்கும் சுமார் 20 வீதமானவர்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் நீரிழிவு மற்றும் ஹார்மோன்கள் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் உதித புளுகஹபிட்டிய தெரிவித்துள்ளார்.

நாம் அனைவரும் சர்க்கரை நோயின்றி வாழ முயற்சி செய்ய வேண்டும். அதற்கு ஒரு மணி நேரம் அல்லது அரை மணி நேரம் உடற்பயிற்சி செய்வது அவசியம்.

அதிக சர்க்கரை உணவுகளை குறைத்து காய்கறிகள், இறைச்சி, மீன் உள்ள உணவில் கவனம் செலுத்தி ஒருவருக்கு ஏற்ற எடையை பராமரிக்க வேண்டும்.

குடும்பத்தில் ஒருவருக்கு சர்க்கரை நோய், உயர் இரத்த அழுத்தம், கொலஸ்ட்ரோல், கழுத்துப் பகுதியில் கருப்பு நிறம், முகப் பகுதியில் முடி வளர்வது போன்ற நிலைகள் இருந்தால் இதுபோன்ற சந்தர்ப்பங்களில் நீரிழிவு நோயை பரிசோதிப்பது முக்கியம் என அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

# உணவின்றி தவிக்கும் இலங்கை மக்கள்

## உலக உணவுத் திட்டம்

**(ஜெனீவா)**

**பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை படிப்படியாக மீண்டு வருகின்ற போதிலும் நாடளாவிய ரீதியில் 10 குடும்பங்களில் 4 குடும்பங்கள் தமது அன்றாட வாழ்வாதார மற்றும் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு பல்வேறுபட்ட மாற்று வழிமுறைகளைக் கையாண்டு வரும் நிலை தொடர்வதாக ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.**

அத்துடன் இலங்கை அண்மைக்காலமாக கால நிலைமாற்ற சவால்களுக்கு முகங்கொடுத்து வருவதாகவும் அதிகரித்த வெப்பநிலை மற்றும் உயர்வான வெப்பம் என்பன மக்களின் ஆரோக்கியத்திலும் விவசாய நடவடிக்கைகளிலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தி வருவதாகவும் உலக உணவுத்திட்டம் சுட்டிக்காட்டியுள்ளது. (நி-6)

# அதிகரிக்கப்படும் மொத்த வரி வருமானம் அரசாங்கத்தின் அடுத்த இலக்கு

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டாகும் போது நாட்டின் மொத்த வரி வருமானத்தின் 40 சதவீதத்தை வருமான வரி, செல்வ மற்றும் ஆதன வரிகள் மூலம் ஈட்டிக்கொள்ள அரசாங்கம் இலக்கு வைத்துள்ளது.

தற்போது இதன் அளவு மொத்த வரியில் 30 சதவீதமாக உள்ளது.

வரி அறவீட்டு வலையை விரிவாக்குதல் மற்றும் வரி ஏய்ப்பாளர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளின் ஊடாக இதனைச் சாத்தியப்படுத்திக் கொள்ள எதிர்பார்ப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அதிக வருமானம் ஈட்டுகின்ற மற்றும் சொத்து பொறுப்பு உடைமையாளர்களுள் வரி செலுத்தும் இயலுமை அதிக முள்ளவர்களிடம் நேரடி வரிகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மொத்த உள்நாட்டு உற்பத்தி 15 சதவீதத்தை எட்டியப் பின்னர் மக்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (நி)

# அத்தியாவசியப் பொருட்களின் விலை சதொசவில் குறைப்பு

(கொழும்பு)

மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் சில அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைத்துள்ளதாக லங்கா சதொச நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்படி, ஒரு கிலோ கிராம் உளுந்தின் விலை 100 ரூபாயினாலும் குறைக்கப்பட்டுள்ளது.

400 கிராம் நிறையுடைய பால்மாவின் விலை 40 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் ஒரு கிலோ கிராம் வெள்ளை சீனியின் விலை 5 ரூபாயினாலும் குறைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் வெள்ளை அரிசி கிலோ ஒன்று 4 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் கீரி சம்பா கிலோவொன்று 2 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது என லங்கா சதொச நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி)

# 87,000 மாணவர்கள் பல்கலைக்கு விண்ணப்பம்

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

87,000 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு இணையத்தளத்தினூடாக விண்ணப்பித்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மாணவர்கள் விண்ணப்பத்தில் ஏதேனும் திருத்தங்களை மேற்கொள்வதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் நேற்று நள்ளிரவுடன் முடிவடைந்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் பேராசிரியர் சந்தன உடவத்த தெரிவித்துள்ளார்.

ஓகஸ்ட் மாத இறுதிக்குள் பல்கலைக்கழகங்களில் இளங்கலைப் பட்டப்படிப்புகளுக்கான வெட்டுப் புள்ளிகளை அறிவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

74 நாட்கள் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட பரீட்சைகளை அடுத்த சில வாரங்களில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக பேராசிரியர் உடவத்த மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# ஏற்றுமதித் தடைகளை நீக்கியது சீன அரசாங்கம்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து கோழி இறைச்சி, முட்டைகள் மற்றும் அன்னாசிப்பழங்களை சீனாவிற்கு ஏற்றுமதி செய்வதற்கான நீண்டகாலத் தடைகளை சீன அரசாங்கம் நீக்கியுள்ளது.

இலங்கை வந்திருந்த சுங்கப் பொது நிர்வாக பிரதி அமைச்சர் வாங் லிங்ஜுங் உள்ளிட்ட குழுவினருடன் கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தநிலையில் குறித்த கலந்துரையாடலில் இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டதாக விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் இலங்கையில் அன்னாசிப்பழ உற்பத்தியாளர்கள் மற்றும் கோழி உற்பத்தியாளர்கள் சீன சந்தைக்கு கோழி இறைச்சி மற்றும் முட்டை மற்றும் அன்னாசிப்பழங்களை ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அநுர ஜப்பான் விஜயம்



(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க நேற்று முன்தினம் ஜப்பான் விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் வெளிவிவகாரப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஜப்பானில் வாழ்கின்ற இலங்கையர்களுடனான சந்திப்பில் பங்கேற்பதற்காக அவர் சென்றுள்ளார்.

அதன்படி நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணிக்கு ஜப்பானில் Tsukuba இல் Yatabe Citizen Hall இல் குறித்த சந்திப்பு இடம்பெறவுள்ளதுடன் திங்கட்கிழமை ஜப்பானில் உள்ள தொழில் வாண்மையாளர்களையும் சந்திக்கவுள்ளார்.

அத்துடன் ஜப்பானின் உயர்மட்ட இராஜதந்திரிகள் சிலரையும் அநுர குமார திசாநாயக்க சந்திக்கவுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தேசிய அணியில் இணைந்த மகாஜன வீராங்கனைகள் நால்வர்










தேசிய அணியில்17 வயதுப் பெண்களுக்கான பிரிவில் தெல்லிப்பளை மகாஜன வீராங்கனைகள் நால்வர் இடம் பிடித்துள்ளனர்.

இந்திய உதைபந்தாட்ட சம்மேளனமும் இந்திய விமானப் படையும் இணைந்து நடத்தும் SABROTO International Football Tournament_2024 இல் பங்குபற்றும் இலங்கை 17 வயதுப் பெண்கள் தேசிய அணியில் மகாஜனக் கல்லூரியின் 4 வீராங்கனைகள் இடம் பிடித்துள்ளனர். இப்போட்டி எதிர்வரும் 5.8.2024 இந்தியாவில் ஆரம்பமாகவுள்ளது.

இந்த அணியில் தெல்லிப் பளை மகாஜனக் கல்லூரியின் வீராங்கனைகளான யசோதரன் கல்சிகா, கேதீஸ்வரன் றேனுஜா, யோகானந்தராசா உமாசங்கவி, சயந்தன் கியுஸ்ரிகாஆகிய வீராங் கனைகள் இடம்பிடித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6-90-350)

# பளுதூக்கல் போட்டியில் மகாஜனவுக்கு 9 பதக்கங்கள்

வடமாகாண ரீதியிலான பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள், பெண்களுக்கான பளுதூக்கல் போட்டியில் யா/மகாஜனக் கல்லூரிக்கு 9 பதக்கங்கள் கிடைத்துள்ளன.

20வயதுப் பிரிவில் ஜே.ஜெனுசின் 102Kg எடையினைத் தூக்கி 1 ஆம் இடம், 17 வயதுப் பிரிவில் ஆர்.சிறிவித்தகி 71Kg எடையினைத் தூக்கி 1ஆம் இடம், 17 வயதுப் பிரிவில் எஸ். ஷானுஜா 81Kg எடையினைத் தூக்கி 1ஆம் இடம் மற்றும் 17 வயதுப் பிரிவில் யு.ரிஷிவன் 73Kg எடையினைத் தூக்கி 2ஆம் இடம், 17 வயதுப் பிரிவில் வி.சாதுரிஜன் 49Kg எடையினை தூக்கி 2 ஆம் இடம், 17 வயதுப் பிரிவில் எ.ஜெஸ்வினி 40Kg எடையினைத் தூக்கி 2 ஆம் இடம், 20 வயது பிரிவில் கே.கேதுஜன் 55Kg எடையினைத் தூக்கி 3ஆம் இடம், 20 வயது பிரிவில் வி. பிரகீஷ் 89Kg எடையினைத் தூக்கி 3 ஆம் இடம், 20 வயது பிரிவில் எஸ். மரியஹர்சின் 87Kg எடையினைத் தூக்கி 3ஆம் இடத்தினைப் பெற்றுள் ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# குஜராத் டைட்டன்ஸ் அணியை விலைக்கு வாங்கும் அதானி குழுமம்




இந்தியன் பிரீமியர் லீக் (ஐபிஎல்) தொடரில் 2022 ஆம் ஆண்டு சம்பியன் பட்டமும், 2023 ஆம் ஆண்டு இரண்டாம் இடம் பிடித்த அணி குஜராத் டைட்டன்ஸ். சிவிசி கேப்பிட்டல் பார்ட்னர்ஸ் என்ற தனியார் நிறுவனம் குஜராத் டைட்டன்ஸ் அணியின் உரிமையாளராக உள்ளது. இந்நிறுவனம் பெரும்பாலான பங்குகளை விற்க இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

மேலும், இந்தியாவின் முன்னணி தொழிலதிபர்களில் ஒருவரான கவுதம் அதானியின் அதானி குழுமம் மற்றும் டொரென்க் குழுமம் சிவிசி கேப்பிட்டல்ஸ் உடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக கூறப்படுகிறது. அணியில் பெரும்பான்மை பங்குகளை தக்கவைத்துக் கொள்ளும் முடிவில் குஜராத் டைட்டன்ஸ் அணி உள்ளது.

எனினும், அதானி குழுமம் மற்றும் டொரெண்ட் குழுமம் குஜராத் அணியில் அதிக பங்குகளை வாங்க ஆர்வம் செலுத்துவதாக தெரிகிறது. தற்போதைய மதிப்பீட்டின் படி குஜராத் டைட்டன்ஸ் அணியின் மொத்த மதிப்பு 1 பில்லியன் டொலர்கள்,.

முன்னதாக 2021 ஆம் ஆண்டு சிவிசி கேப்பிட்டல்ஸ் நிறுவனம் இந்த அணியை ரூ. 5 ஆயிரத்து 625 கோடி கொடுத்து விலைக்கு வாங்கியது குறிப்பிடத்தக்கது. (நி-6)

# குண்டு போடுதலில் வெள்ளிப் பதக்கம்




48 ஆவது தேசிய மட்ட தடகளப் போட்டியில் ஆண்களுக்கான குண்டு போடுதலில் வட மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.மிதுன்ராஜ் வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளார்.

மாகாணங்களுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான தேசிய மட்ட தடகளப் போட்டிகள் கொழும்பு சுகதாஸ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இதில் ஆண்களுக்கான குண்டு போடுதல் போட்டியில் வட மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.மிதுன்ராஜ் 14.72 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப்பதக்கத்தை கைப்பற்றியுள்ளார். (நி-6-90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளியவர்கள் ராஜபக்ஷக்களே

## சம்பிக்க ரணவக்க பகிரங்கம்

(கொழும்பு)

இலங்கையை வங்குரோத்து நிலைக்கு தள்ளியவர்கள் ராஜபக்சக்களே என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், "நாட்டைக் கட்டியெழுப்பும் விரிவான செயற்றிட்டத்தை நாங்கள் வெளிப்படுத்தியுள்ளோம்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணபதற்கும் குடும்பங்களின் தரத்தை மேம்படுத்துவதற்கும் குறுகிய மற்றும் நீண்டகால அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய திட்டங்களை முன்வைத்துள்ளோம்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் உத்தியோகபூர்வமான அறிவிப்பு விடுக்கும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும் ஒரு தரப்பினர் ஏதாவதொரு வழியில் தேர்தலை பிற்போடுவதற்கு விசேட கவனம் செலுத்தியுள்ளார்கள்.

ராஜபக்சக்கள் ஒத்துழைப்பு வழங்கும் ஜனாதிபதி வேட்பாளருக்கு நாங்கள் ஆதரவு வழங்க போவதில்லை, ஏனெனில் ராஜபக்சக்கள் தான் இந்த நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளினார்கள்.

அதேபோல் பொருளாதார படுகொலையாளிகள், பெற்றோலிய கூட்டுத்தாபனத்தை கொள்ளையடித்தவர்கள், உர இறக்குமதியை தடை செய்து விவசாயத்தை நிர்மூலமாக்கியவர்கள், மருந்து கட்டமைப்பை இல்லாதொழித்தவர்கள் உட்பட அனைத்து குற்றச் செயல்களிலும் ஈடுபட்டவர்களுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொண்டு அவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும்.

இதற்கான யோசனைகளை நாங்கள் எமது கொள்கைத்திட்டத்தில் முன்வைத்துள்ளோம். இவற்றை செயற்படுத்துவதாக உறுதியளிப்பவர்களுக்கு ஆதரவு வழங்குவோம்" என அவர் தெரிவித்தார். (நி)

# 22 ஆவது திருத்தம்; வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவின் பேரில் 22 ஆவது அரசியலமைப்பு திருத்தம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டது.

ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பான அரசியலமைப்பின் 83 (ஆ) சரத்தில் "6 வருடங்களுக்கு மேல்" என்ற சொற் தொடருக்கு பதிலாக "5 ஆண்டுகளுக்கு மேல்" என்ற வார்த்தை திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ச வர்த்தமானியில் வெளியிடுவதைத் தவிர்ப்பதாக நேற்று முன்தினம் அறிவித்ததன் பின்னனியில் ஜனாதிபதியினால் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பாடசாலைகள் மீதான சைபர் தாக்குதல்

## விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

நாட்டில் ஏழு முன்னணி பாடசாலைகளின் இணையத்தளங்கள் மீதான சைபர் தாக்குதல் தொடர்பில் கணனி அவசர தயார்நிலைக் குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

சில இணையத்தளங்கள் முடக்கப்பட்டுள்ளதாகவும் கணனி அவசர தயார் நிலை குழு சிரேஷ்ட பொறியியலாளர் சாருகா தமுனுபொல தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் சைபர் தாக்குதலுக்குள்ளான பாடசாலைகள் தொடர்பில் கல்வி அமைச்சிடம் அறிக்கை கோரப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி)

## 42 மில்.பெறுமதியான

# வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் இருவர் கட்டுநாயக்கவில் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட 42 மில்லியன் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் இருவர் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு அதிகாரிகளால் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் பன்னிப்பிட்டிய, கொட்டாவ பகுதியைச் சேர்ந்தவர்.

மற்றைய நபர் நீர்கொழும்பு கொச்சிக்கடையில் வசிக்கும் 41 வயதுடைய பெண். இவர்கள் இருவரும் சட்டவிரோதமான முறையில் 42, 000 வெளிநாட்டு சிகரெட்டுகளை கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

கைதான இருவரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப் பட்டதோடு எதிர்வரும் 24 ஆம் திகதி நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர். (நி)

# தேங்காய்க்கு தட்டுப்பாடு ஏற்படலாம் தெங்கு செய்கையாளர் எச்சரிக்கை

(புத்தளம்)

நாட்டில் எதிர்காலத்தில் தேங்காய்க்கு தட்டுப்பாடு ஏற்படலாமென தெங்கு செய்கையாளர்கள் எச்சரித்துள்ளனர்.

வெள்ளை ஈ தாக்கம் காரணமாக புத்தளத்தில் மட்டும் சுமார் 5000 ஏக்கர் தெங்கு செய்கை முற்றாக அழிவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. புத்தளம் மாவட்டத்தில் தெங்கு பயிர்ச்செய்கைக்கு வெள்ளை ஈ நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளதால் தாம் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளதாக தெங்கு செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உரிய அதிகாரிகள் இந்த விடயம் குறித்து கவனம் செலுத்த வேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த நிலைமையை கட்டுப்படுத்தாவிட்டால் தேங்காய்க்கு எதிர்காலத்தில் தட்டுப்பாடு ஏற்படலாமென விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (நி)

# இராசிபலன்

20.07.2024
ஆடி 04, சனிக்கிழமை
சதுர்த்தசி பிற்பகல் 6.08 மணிவரை

பூராடம் பின்னிரவு 2.48 மணிவரை
சுபநேரம் 3.01-4.31 மணி வரை
இராகுகாலம் 9.01-10.31 மணிவரை

சந்திராஷ்டமம் - கார்த்திகை

வளவன்




இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள்.




செய்தொழிலில் உற்சாகம் காட்டுவீர்கள், வழிபாடு சிறப்பினைத் தரும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.




சுறுசுறுப்புடன் செயற்படும் நாள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.




வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.




கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறலாம், எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.




குடும்ப மகிழ்ச்சி கூடும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள்.




பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும்.




உறவினர் நண்பர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பேச்சில் கனிவு பிறக்கும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.




இரவு பகல் பாராது பாடுபடுவீர்கள், மற்றவர்களின் விமர்சனங்களை மதித்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை.




பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் உயர்வை உன்னை விட உயர்ந்தவனை வைத்துப் பார்.

# 350 கிராமங்களில் அபிவிருத்தி வேலைத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

நாடு முழுவதும் 5 ஆயிரம் கிராமங்களை அபிவிருத்தி செய்யும் தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டம் தொடர்பான யாழ்.மாவட்டத்துக்கான கலந்துரையாடல் யாழில் உள்ள தனியார் விடுதியொன்றில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

குறித்த நிகழ்ச்சித் திட்டம் ஊடாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 350 கிராமங்களை அபிவிருத்தி செய்வதனூடாக வறுமையின் பிடியிலுள்ள மக்களை முன்னேற்றுவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன் மூலம் ஒரு லட்சம் வகையான தொழில் வாய்ப்புக்களை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளன.

குறித்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவன், சனச சங்கத்தின் தலைவர் வைத்தியர் பி.ஏ.கிரிவந்தெனிய, யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலர்கள், கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (நி-6-33)

## நிறைவு விழாவும் சான்றிதழ் வழங்குதலும்

(யாழ்ப்பாணம்)

பிரித்தானிய சமூக முன்னேற்ற மையத்தின் மரபுரிமை அலகின் நிதி பங்களிப்புடனும் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் அனுசரணையுடனும் ஆனைக்கோட்டையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வின் நிறைவு விழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இன்று மாலை 3.30 மணிக்கு யாழ்.பொதுசன நூலகத்திற்கு அருகில் உள்ள யாழ்.பண்பாட்டு மையத்தில் நடைபெற உள்ளது.

யாழ்.மரபுரிமை மையத்தின் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் மருத்துவ பீடப் பீடாதிபதியும் சத்திரசிகிச்சை பேராசிரியருமான சுப்பிரமணியம் ரவிராஜ் கலந்து கொள்ளவுள்ளார். (நி)



யா/யூனியன் கல்லூரியில் புதிய சாரணர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை பாடசாலையின் சாரணத் தலைவர் சுஜீவன் தலைமையில் இடம்பெற்றது. சின்னம் சூட்டும் வைபவத்தில் அருட்பணி இ.ராஜ்குமார், பாடசாலை அதிபர் தி.வரதன், சாரணர் மாவட்ட ஆணையாளர் கிருபானந்தன், சாரணர் உதவி மாவட்ட ஆணையாளர் தேவரூபன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்களுக்கான கௌரவிக்கும் நிகழ்வு தேசிய சேமிப்பு வங்கி அச்சுவேலி கிளையினால் நேற்று முன்தினம் யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது. அதிதிகளாக யாழ்.பல்கலைக்கழக கல்வியியல் துறை விரிவுரையாளர் இரட்ணசிங்கம் சர்வேஸ்வரா மற்றும் வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் நடராஜா பகீரதன் மற்றும் யா/புனித திரேசாள் மகளிர் கல்லூரி, அச்சுவேலி அதிபர் அருட் சகோதரி அருள் மரியா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சா/த மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு அருள் கல்வி வட்டம் நடத்தும் க.பொ.த (சா/த)-2024 மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளது.

7 ஆம் திகதி மு.ப 8.30-பி.ப 2 மணி வரை ஊர்காவற்றுறை பிரதேச செயலகம், 8 ஆம் திகதி மு.ப 8.30-பி.ப 2 மணி வரை வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி, 9 ஆம் திகதி மு.ப 7- பி.ப 2 மணி வரை யாழ்.வீரசிங்கம் மண்டபம் (பெண் பாடசாலை மாணவர்களுக்கு மட்டும்), 10 ஆம் திகதி மு.ப 7- பி.ப 2 மணி வரை யாழ்.வீரசிங்கம் மண்டபம் (ஆண்பாடசாலை மாணவர்கள் மட்டும்), 11 ஆம் திகதி மு.ப 7 - பி.ப 2 மணி வரை யாழ். வீரசிங்கம் மண்டபம் (கலவன் பாடசாலை மாணவர்கள் மட்டும்), 12 ஆம் திகதி மு.ப 8-பி.ப 2 மணி வரை கிளிநொச்சி கூட்டுறவு மண்டபம் (தெற்கு வலயம்), 13 ஆம் திகதி மு.ப 8-பி.ப 2 மணி வரை கிளிநொச்சி கூட்டுறவு மண்டபம் (வடக்கு வலயம்), 14 ஆம் திகதி மு.ப8-பி.ப 2 மணிவரை ஊற்றங்கரை விநாயகர் ஆலய மண்டபம், 15 ஆம் திகதி மு.ப 8-பி.ப 2 மணி வரை மன்னார் நகர சபை மண்டபம், 16 ஆம் திகதி மு.ப 8-பி.ப 2 மணி வரை வவுனியா நகர சபை மண்டபம் மேற்குறித்த இடங்களில் நடைபெறவுள்ளது.

மேலும் க.பொ.த (சா/த) கடந்த கால வினாவிடைத் தொகுப்புப் புத்தகமும் இலவசமாக வழங்கப்படும். மேலதிக தகவல்களுக்கு 077 113 3400 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-6)

# தெல்லிப்பளையில் இடம்பெற்ற இலவச நடமாடும் சேவை



(சாவகச்சேரி)

சட்டத்திற்கும் மனித உரிமைகளுக்குமான நிலையமானது தெல்லிப்பளை பிரதேச செயலகத்துடன் இணைந்து நேற்று வியாழக்கிழமை இலவச சட்ட விழிப்புணர்வுக் கலந்துரையாடலையும் நடமாடும் சேவை நிகழ்வையும் தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் முன்னெடுத்திருந்தது.

USAID மற்றும் SCORE திட்ட அனுசரணையோடு இடம்பெற்ற மேற்படி இலவச சட்ட ஆலோசனை மற்றும் நடமாடும் சேவை நிகழ்வுகளில் காலம் கடந்த பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவுகள், தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கான பதிவுகள், பொலிஸ் அறிக்கை பெறுதல் மற்றும் புகைப்படம் எடுத்தல் போன்ற சேவைகள் முன்னெடுக்கப்பட்டன.

தெல்லிப்பளை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி கோ.சங்கீதா தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் திட்ட இணைப்பாளர்களான றொகான் மற்றும் றெக்ஸ், ஆட்பதிவுத் திணைக்கள உதவி ஆணையாளர், தெல்லிப்பளை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர், கிராம நிர்வாக அலுவலர், சட்டத்திற்கும் மனித உரிமைகளுக்குமான நிலைய உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர், சமாதான நீதிவான் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கான சேவையை வழங்கியிருந்தனர்.

மேற்படி இலவச நடமாடும் சேவை ஊடாக நூற்றுக் கணக்கான பொதுமக்கள் பயனடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-30)

# விவசாய மாதிரிக் கிராமம்

## விவசாய அமைச்சர் பங்கேற்பு

(கரணவாய்)

விவசாய மாதிரிக் கிராம திறப்பு விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அல்வாய் கிழக்கு வெள்ளிருவை மாதர் சங்க மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், யாழ். மாவட்ட பதில் அரச அதிபர் பிரதீபன், கரவெட்டி பிரதேச செயலாளர் ஈ.தயாரூபன் உள்ளிட்டோர் கலந்து கொள்ள உள்ளனர். (நி-6-60)



நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் இருந்த இராமநாதன் இல்லம் ரசேந்திரன் தியாகராஜாவினால் புனர்நிர்மானம் செய்யப்பட்டு கடந்த 12 ஆம் திகதி அன்று பாடசாலை அதிபர் திருமதி அம்பிகை சிவஞானத்திடம் கையளிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழங்கப்படும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும்

## யாழில் கையெழுத்து போராட்டம்

**(யாழ்ப்பாணம்)**

**தேர்தல் காலங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும் எனக் கோரி கையெழுத்துப்பெறும் வேலைத்திட்டமொன்று யாழ்ப்பாணத்தில் நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.**





தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள பொது மக்களிடம் குறித்த கையெழுத்துக்கள் பெறப்பட்டன.

தேர்தல் காலங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் வழக்கமாக நிறைவேற்றப்படுவது இல்லை. அவ்வாறான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான சட்டமூலம் ஒன்று பாராளுமன்றத்தில் இயற்றப்பட வேண்டும் என கோரியே கையெழுத்துக்கள் பெறப்பட்டன.

குறித்த கையெழுத்து போராட்டம் 17 மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ரி-33)

## யாழ்.றோயல் பிளேஸ் அடிக்கல் நாட்டி வைப்பு





(யாழ்ப்பாணம்)

Tilko blue ocean நிறுவனத்தின் "yarl Royal Palace" சொகுசு வீட்டுத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் கண்டி வீதியில் பழைய பூங்காவிற்கு முன்பாக இடம்பெற்ற அடிக்கல் நாட்டு விழாவில் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம், மருத்துவ பீட பீடாதிபதி, கலைப்பீட பீடாதிபதி உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு அடிக் கல்லை நாட்டி வைத்தனர்.

குறித்த சொகுசு மாடி வீட்டுத் தொகுதியானது புதிய பரிமாண வளர்ச்சி தொழில் நுட்பங்களை கொண்டமைக்கப்படவுள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் யாழ்ப்பாணத்தில் தமது முதலீடுகளை மேற் கொள்ள முடியும்.

எமது இந்த முயற்சி ஊடாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் யாழ்ப்பாணத்தை நாடி வருவார்கள் என நம்புகிறோம். யாழ்ப்பாணத்தை பெரிய சிங்கப்பூர் ஆக்க வேண்டும் என்பதே எமது விருப்பம். நாம் இந்தத் துறையில் நீண்ட கால அனுப வங்களை கொண்டவர்கள். எமது அனுபவங்கள் அறிவினைக் கொண்டு யாழ்ப்பாணத்தில் மிக பிரமாண்டமாக புதிய தொழில் நுட்பங்களை உட்புகுத்தி இந்த சொகுசு மாடியை நிர்மாணிக்க உள்ளோம் என blue ocean நிறுவனத்தின் சிவராஜா துமிலன் மற்றும் Tilko City Hotel உரிமையாளர் திலக் திலகராஜ் ஆகியோர் தெரிவித்தனர். (ரி-33)


**லங்கா மஹால் (PVT) LTD**

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956615 6719**

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
[illegible]



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 23 1 இல் செவ்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L,London
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/14677

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: மகம் 2இல் செவ்
கி.பா: 35
உயரம்: 5'6"
தகைமை/ தொழில்: A/L,Driver
எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள மணமகள்
தொ.இ: B/14679

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: ரேவதி 7 இல் செவ்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Bsc, Bio Medical Engineer
எதிர்பார்ப்பு: IT Field விவாகரத்து.
தொ.இ: B/14681

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 1இல் செவ்
கி.பா: 22 3/4
உயரம் : 5'3"
தகைமை/தொழில்: IT special, Soft ware Engineer
எதிர்பார்ப்பு:Doctor, Engineer
தொ.இ: G/14031

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 10இல் சூரி செவ்
கி.பா: 7
உயரம் : 5'4"
தகைமை/தொழில்: Bsc, TO
எதிர்பார்ப்பு:பட்டதாரி. அரச உத்தியோகம்
தொ.இ: G/14033

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: பரணி 1 இல் செவ்
கி.பா: 26
உயரம் : 5'6"
தகைமை/தொழில்: Pharmacist
எதிர்பார்ப்பு: உயர் பதவி
தொ.இ: G/14035

**கல்யாணமாலை**
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# 48 மணி நேரத்தில் மரணத்தை ஏற்படுத்தும் புதிய வகை வைரஸ் குஜராத்தில்

(டில்லி)

குஜராத் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் சந்திபுரா எனும் வைரஸ் வேகமாகப் பரவி வருகின்றது.

குஜராத் மாநிலத்தில் மாத்திரம் கடந்த 2 வாரங்களில் இறந்த 6 குழந்தைகள், இந்த சந்திபுரா வைரஸ் தொற்றால் உயிரிழந்திருக்கலாம் என வைத்திய நிபுணர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, குழந்தைகளின் இறப்புக்கு இந்த வைரஸ் தான் காரணமா என்பதை உறுதி செய்வதற்கு இரத்த மாதிரிகளைப் புனேவில் உள்ள தேசிய நுண்ணுயிரியல் ஆய்வு நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மணல் ஈக்கள் மூலம் பரவும் இந்த நோய்த் தொற்று ஏற்பட்டு 24 முதல் 48 மணிநேரத்தில் மரணத்தை ஏற்படுத்துவதாக தெரிவிக்கப்படுகிறது.



இந்த நிலையில், குஜராத்தின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள 44,000 இற்கும் அதிகமான மக்களிடம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# தகவ
# விமா
# சர்வ

(கன்பெரா)

பாரிய தகவல்

வங்கிகள் விமான

லண்டனின் பங்குச் சந்தை பாதிக்கப்பட்டுள்ள அதே வேளை அமெரிக்கா வின் அலாஸ்கா மாநிலத்தில் அவ

சரசேன

என.

அவ

மோசப

# வேட்டி கட்டிய முதியவருக்கு
## அனுமதி மறுத்த ஷொப்பிங் மாலுக்கு சீல்

(டில்லி)

கர்நாடகா மாநிலம் பெங்களூரில் உள்ள GT ஷாப்பிங் மாலுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை இரவு வேட்டி கட்டி வந்த முதியவருக்கு அனுமதி மறுக்கப்பட்ட சம்பவம் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதுதொடர்பான வீடியோ வெளியாகி கண்டனங்களை குவித்து வருகிறது.




வேட்டி கட்டிய அந்த முதியவர் படம் பார்ப்பதற்காக அந்த மாலுக்கு வந்துள்ளார். மாலுக்குள் நுழையும் போது வேட்டி கட்டியவர்களுக்கு அனுமதி இல்லை, பேன்ட் மாற்றிக் கொண்டு வந்தால் அனுமதிக்கின்றோம் என மால் ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

முதியவரிடம் ப்ரீ புக்கிங் செய்யப்பட்ட பட டிக்கெட் இருந்தும், வேட்டியை அனுமதிக்கக்கூடாது என்பது தங்களது மாலின் கொள்கைகளில் ஒன்று என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்த முதியவர் விவசாயி என பின்னர் தெரியவந்தது. இந்நிலையில் இந்தச் சம்பவம் சர்ச்சையான நிலையில் GT ஷாப்பிங் மாலுக்கு 7 நாட்களுக்கு மூடி சீல் வைக்க கர்நாடக அரசு நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது. விவசாயிக்கு ஏற்பட்ட இந்த அவமரியாதையை வன்மையாகக் கண்டிப்பதாகவும் தனி மனித கண்ணியத்துக்கும் சுயமரியாதைக்கும் இழுக்கு ஏற்படுவதை அரசு பொறுத்துக் கொண்டிருக்காது என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த சம்பவத்துக்கு அம்மாநில அரசியல் தலைவர்களும் கண்டனங்களை தெரிவித்துள்ளனர். (நி)

# அடுத்த அற
## ஆர்ப்பாட்டங்க

(நைரோப்)

கென்யாவின் தலைநகரான நைரோபியில் அடுத்த அறிவிப்பு வரும் வரை ஆர்ப்பாட்டங்களைத் தடை செய்ய கென்யா பொலிஸ் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் ஆர்ப்பாட்டக்காரர்களுக்குள் ஊடுருவி கலவரச் சூழலை உருவாக்குவதாகத் தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

வரிகளை அதிகரிப்பதற்கு அரசாங்கம் கொண்டு வந்த



பி
வி
ஞ
பி
வ
து

# தொடர் அத்துமீறலில் வட கொரியா
## தென் கொரியாவில் குவியும் இராட்சத பலூன்கள்

(பியாங்யாங்)

தென் கொரியாவின் சியோல் நகரத்திற்கு வடக்கே, வட கொரியா அனுப்பிய இராட்சத பலூன்கள் வருவதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



வடகொரியாவின் இந்த செயல் சர்வதேச சட்டத்தை மீறுவதாக உள்ளது என்றும், இது தென்கொரிய மக்களுக்கு எதிரான அச்சுறுத்தல் என்றும் அந்நாட்டு அதிகாரிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

குறித்த பலூன்களில் குப்பைகள் கட்டி வைக்கப்பட்டிருக்கலாம் என தென் கொரிய அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கொரிய தீபகற்பத்தில் வடகொரியா அமெரிக்காவுடன் இணைந்து அடிக்கடி ஏவுகணை சோதனை நடத்தி தென் கொரியாவை அச்சுறுத்தி வருகிறது. இதனிடையே சமீப காலமாக வட கொரியா ஏராளமான இராட்சத பலூன்களை தென் கொரியா எல்லைக் குள் அனுப்பி வருகிறது.

குறித்த பலூன்களில் குப்பைகள் கட்டி வைக்கப்பட்டுள்ள நிலையில் தென் கொரியா பகுதிகளுக்குள் இதுபோன்ற ஏராளமான குப்பைகளை கொண்ட பலூன்கள் பறந்து வந்துள்ளதாக தென்கொரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்(நி-6)

# ஜோ பைடன்-நெதன்யா
## அமெரிக்க தூதரகம் அருகே ட்ரே

(டெல்அவிவ்)

பாலஸ்தீன நகரங்களின் மீது இஸ்ரேலின் தாக்குதல்கள் அபாயகரமான கட்டத்தை எட்டியிருக்கும் நிலையில் இஸ்ரேல் நகரமான டெல்அவிவ் நகரத்தில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் அருகே நேற்று அதிகாலை வான்வழியாக ட்ரோன் தாக்குதல் நடந்துள்ளது. இந்த தாக்குதலுக்கு ஏமனைச் சேர்ந்த ஹவுதி கிளர்ச்சியாளர்கள் பொறுப்பேற்றுள்ளனர்.

நேற்று அதிகாலை 3.15 மணியளவில் டெல் அவிவ் நகரின் மையப்பகுதியில் பென் யகுதா மற்றும் ஸலோம் அலைய்கெம் தெருக்கள் சந்திக்



கும் இடத்தில் உள்ள கட்டடத்தின் மீது ட்ரோன் மூலம் தாக்குதல் நடந்துள்ளது. இந்த வான்வெளித் தாக்குதலில் ஒருவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ல் தொழில்நுட்ப கோளாறு!

# ...ான, வங்கி சேவைகள்

# ...தேச அளவில் ஸ்தம்பிதம்!

**...ல்தொழில்நுட்பக் கோளாறு காரணமாக சர்வதேச அளவில் ...ான சேவைகள் ஊடக நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.**

...ரசேவைகள் பாதிக்கப்பட்டுள் ...ான.

... அவுஸ்திரேலியா மிக மோசமாக பாதிக்கப்பட்டுள் எது. விமானசேவைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன. வணிக வளாகங்களில் சேவை கள் பாதிக்கப்பட்டுள்ளன. கணனி கள் செயல் இழந்துள்ளதால் ஊடக நிறுவனங்கள் நெருக் கடியை எதிர்கொள்கின்றன.

பெரும்பாலான சேவை கள் சில மணிநேரங்களில் வழ மைக்குத் திரும்பிவிட்டன.

இந்த செயல் இழப்பிற்கு சர்வதேச சைபர் பாதுகாப்பு நிறுவனமான கிரவுட் ஸ்டி ரைக்கில் ஏற்பட்ட பிரச்சினையே காரணம் என தெரிவித்துள்ள அவுஸ்திரேலிய உள்துறை அமைச்சக பேச்சா ளர் சைபர் தாக்குதல் இடம் பெற்றுள்ள மைக்கான அறிகுறி எதுவும் இல்லை என நாட்டின் சைபர் பாதுகாப்பு அமைப்பு தெரிவித் துள்ளதாகவும் குறிப்பிட்டுள் ளார். (நி)

## ...அறிவிப்பு வரும் வரை
## ...களுக்கு கென்யாவில் தடை



பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரி வித்து நாட்டில் உள்ள இளை ஞர்கள் போராட்டங்களை ஆரம் பித்தனர். இதன் போது இது வரை சுமார் 50 பேர் உயிரிழந் துள்ளனர்.

இந்த திட்டம் ஜனாதிபதி வில்லியம் ரூட்டோவால் வாபஸ் பெறப்பட்டது. அவர் அமைச் சரவையின் பெரும் எண்ணிக் கையையும் நீக்கினார். ஆனால் போராட்டங்கள்தொடர்கின்றன.(நி)

## பங்களாதேஷில் தொடரும் வன்முறை
### அரச தொலைக்காட்சி அலுவலகத்திற்கு தீ வைப்பு



(டாக்கா)

பங்களாதேஷில் அரச வேலைவாய்ப்பில் ஒதுக் கீடுகளிற்கு எதிரான மாண வர் போராட்டம் தொடரு கின்ற அதேவேளை ஆர்ப் பாட்டக்காரர்கள் தலைநகர் டாக்காவில் அரச தொலைக் காட்சி தலைமையலுவல கத்திற்கு தீவைத்துள்ளனர்.

டாக்காவில் தலைமை அலுவலகத்திற்குள் பலர் சிக்குண்டுள்ளனர். உள்ளே சிக் குண் டுள் ளவர் கள் தங்களை காப்பாற்ற தீய ணைப்பு பிரிவினருக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

பங்களாதேஷில் சுதந்திர போராட்ட வீரர்களின் குடும் பத்தவர்களிற்கு அரசாங்க வேலைவாய்ப்பில் ஒதுக் கீட்டை எதிர்க்கும் மாண வர்களிற்கும் ஆளும் கட் சியின் ஆதரவாளர்களிற் கும் இடையில் இடம்பெற்ற மோதல்கள் காரணமாக 17 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 100 இற்கும் அதிகமான மாணவர்கள் காயமடைந் துள்ளனர்.

1971 ஆம் ஆண்டு சுதந் திர போராட்டத்தில் ஈடுபட்ட வர்களின் பிள்ளைகள் உட் பட விசேட குழுவினருக்கு ஆயிரக்கணக்கான அரச வேலை வாய்ப்புகளை ஒதுக் கும் நடைமுறை பங்களா தேசில் காணப்படுகின்றது.

இந்த முறையின் கீழ் பெண்கள், மாற்றுத்திறனா ளிகள், சிறுபான்மை இனக் குழுக்களை சேர்ந்தவர்களி ற்கு அரச வேலைகளில் ஒதுக்கீடு வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

2018 இல் இந்த ஒதுக் கீட்டு முறை இடை நிறுத் தப்பட்டதை தொடர்ந்து கடும் ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றன.

இந்நிலையில் சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்டவர் களின் குடும்பத்தவர்க ளிற்கு 30 வீத ஒதுக்கீட்டை மீள வழங்க வேண்டும் என உயர்நீதிமன்றம் கடந்த மாதம் உத்தரவிட்டது.

இது புதிய ஆர்ப்பாட்டங் களிற்கு வழிவகுத்துள்ளது. மாற்றுத்திறனாளிகள் சிறு பான்மை இனங்களை சேர்ந்தவர்களிற்கு ஆறு வித ஒதுக்கீட்டை ஏற்றுக் கொண்டுள்ள ஆர்ப்பாட் டக்காரர்கள் சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்டவர் களின் வம்சாவளியின ருக்கு ஒதுக்கீடு வழங்கப் படுவதை எதிர்க்கின்றனர்.

இந்த ஒதுக்கீட்டை நான்கு வாரங்களிற்கு ஒத் திவைப்பதாக கடந்த வாரம் உயர்நீதி மன்றம் தெரிவித்துள்ளது. நான்கு வாரங்களில் இது குறித்த தீர்ப்பை வழங்குவதாக தெரிவித்துள்ள உயர் நீதி மன்றம் மாணவர்களை கல்வி நடவடிக்கைகளை தொடருமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த ஒதுக்கீடு முறையை நிறுத்த வேண் டும் என கோரி கடந்த திங்கட்கிழமை முதல் பங்களாதேஷ் பல்கலைக் கழகங்களில் மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட் டுள்ளனர்.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை ஒதுக்கீடு முறையை எதிர்க்கும் மாண வர்களும் ஆளும் அவாமி லீக் கட்சிக்கு ஆதர வான மாணவர்களும் டாக்கா பல்கலைக்கழகத்தில் மோதலில் ஈடுபட்டனர் என தெரிவித்துள்ள பொலிஸார் கற்களை வீசியும் தடிகள் போன்றவற்றால் தாக்கியும் மாணவர்கள் வன் முறை களில் ஈடுபட் டனர் என தெரிவித்துள்ளனர். (நி-6)

## ...பாகு சந்திப்பு
## ...ட்ரோன் தாக்குதல்



...த் ...க் ...ன் ...வர்

உயிரிழந்துள்ளார். மேலும் 2 பேர் படுகாயமடைந்துள்ளனர். தாக்குதலுக்குள்ளான கட்டடம் அமெரிக்கத் தூதரக கட்டடத்துக்கு வெகு அருகாமையில் உள் ளது.

இதற்கிடையில் காசா நகரில் இயங்கி வரும் அமெரிக்க பள்ளி மீதும், 2 அகதி முகாம்கள் மீதும் இஸ்ரேல் நடத்திய தாக்கு தலில் 5 பேர் கொல்லப் பட்டுள்ளதாக தகவல் வெளி யாகியுள்ளது.

கடந்த 9 மாதங்களுக் கும் மேலாக பாலஸ்தீன நகரங்கள் மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் இதுவரை 38,848 பேர் கொல்லப்பட்டுள்ளனர், 89,459 பேர் படுகாய மடைந்துள்ளனர்.

அடுத்த வாரம் அமெ ரிக்க ஜனாதிபதி ஜோ பைட னும், இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவும் சந்திக்க வுள்ளமை குறிப்பிடத்தக் கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்கவாத நோய் அறிகுறி இருந்தால் விரைவில் வைத்தியசாலையை நாடுங்கள்

**(கொழும்பு) பக்கவாத நோய் அறிகுறிகள் கண்டறியப்பட்டால் உடனடியாக அருகிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்குமாறு இலங்கை தேசிய பக்கவாத சம்மேளனத்தின் தலைவர் காமினி பத்திரன குறிப்பிட்டுள்ளார்.**

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்

பக்கவாத நோயை வீட்டிலேயே கண்டறிவது மிகவும் அவசியமானது. அதன்படி அதனை அவதானித்து விரைவில் வைத்தியசாலையில் அனுமதிக்குமாறு வைத்தியர் குறிப்பிட்டுள்ளார்.

நம் சமூகத்தில் நான்கு பேரில் ஒருவருக்கு அவர்களின் வாழ்நாளில் பக்க வாதம் வர வாய்ப்புள்ளது. பக்கவாதம் என்பது ஒருவரின் உயிரைக் கொல்லும் ஒரு நோய். அதைத் தடுக்கக்கூடிய 10 விடயங்கள் காணப்படுகின்றன.

இதற்கிடையில் இரத்தஅழுத்தம், நீரிழிவு, கொலஸ்ரோல் அதிகரிப்பு, உடற்பருமன் மற்றும் புகைப் பிடித்தல் போன்றவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும்.

வாய் கோணிச் செல்லல், கை அல்லது கால் உணர்வின்மை, வாய் உளறல் ஆகியவை இந்நோய்களின் அறிகுறிகளாகும்.

அவர்கள் கண் பார்வையையும் சமநிலையும் இழக்க நேரிடும்.

இவை அனைத்தும் உடனடியாக நடக்கும். அப்படியானால் அது நடக்கும் நேரத்தை கவனிக்க வேண்டியது அவசியம் எனத் தெரிவித்துள்ளார். (ரி-6)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 220 | 250 | 250 | 280 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 400 | 400 |
| தக்காளி | 450 | 400 | 420 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 170 | 160 | 200 |
| கோவா | 350 | 380 | 400 | 400 |
| கரட் | 450 | 500 | 500 | 600 |
| பூசணி | 200 | 200 | 200 | 250 |
| புடோல் | 160 | 300 | 200 | 200 |
| வாழைக்காய் | 250 | 260 | 200 | 250 |
| சின்ன வெங்காயம் | 300 | 240 | 400 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 260 | 250 | 200 |
| பாகற்காய் | 1200 | 600 | 800 | 600 |
| வெண்டக்காய் | 180 | 250 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 200 | 180 | 180 | 200 |
| பயற்றங்காய் | 350 | 400 | 350 | 400 |
| லீக்ஸ் | 500 | 500 | 500 | 600 |
| பீற்றூட் | 400 | 380 | 500 | 500 |
| கறிமிளகாய் | 800 | 800 | 800 | 900 |
| முருங்கைக்காய் | 600 | 450 | 450 | 600 |
| போஞ்சி | 600 | 600 | 650 | 800 |
| கத்தரி தம்புள்ள | 150 | 150 | 200 | 180 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 60 | 60 |
| தேசிக்காய் | 600 | 600 | 600 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 90 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | 600 | 600 |
| வெங்காயப்பூ | 400 | 360 | 450 | 500 |
| முள்ளங்கி | 120 | 120 | 140 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 80 | 50 | 80 |

# இன்று ஒரு தகவல் 188



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# உயில்

ஒரு பெரியவர் வந்தார். சார் தகவல் சொல்கின்றது யார்? நீங்கள் தானா என்றார். ஆமாம் என்றேன். எனக்கு ஒரு பெரிய பிரச்சினை நீங்கள் தான் ஏதாவது வழி சொல்ல வேண்டும் என்றார். சரி இன்றைக்கு கைவசமாக மாட்டிக் கொண்டோம் என்று முடிவு செய்து கொண்டே என்ன பிரச்சினை சொல்லுங்கள் என்றேன். பிரச்சினை என்ன என்பதை பிறகு சொல்கின்றேன். முதலில் என் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள் என்றார். சரி கேளுங்கள் என்றேன்.

சட்டத்திலே உயில், செட்டில்மென்ட் என்று இரண்டு வார்த்தை அடிபடுகின்றதே அதைப்பற்றி விவரம் தேவை. உயில் என்றால் என்ன? செட்டில்மென்ட் என்றால் என்ன? என்று கேட்டார். சரி சார் ஏதோ பெரிய லட்சாதிபதி போல இருக்கிறது தன்னுடைய வாரிசுகளுக்கு சொத்துக்களை பிரித்துக் கொடுக்கின்ற ஐடியாவிலே இருக்கின்றார் என்பதை யூகம் செய்து கொண்டேன். இருந்தாலும் இதற்கு யோசனை கேட்க ஒரு நல்ல சட்டத்தரணியைத் தேடிப் போயிருக்கலாம். அவருடைய நேரம் என்னிடம் வந்து சேர்ந் திருக்கின்றார். இருக்கட்டும் பரவாயில்லை. நமக்கு தெரிந்ததை சொல்லுவோம் என்று நினைத்து ஆரம்பித்தேன்.

ஒருவர் தன்னுடைய சொத்துக்களை மற்றவர்களுக்கு அதாவது வாரிசுகளுக்கு எழுதிவைக்க வேண்டும் என்று நினைத்தால் அதை இரண்டு விதமாகச் செய்யலாம். ஒன்று உயில் இன்னொன்று செட்டில் மென்ட். செட்டில்மென்ட் என்பது என்ன என்றால் ஒருவர் உயிருடன் இருக்கும் போதே தன்னுடைய சொத்துகளைப் பிரித்து கொடுக்கின்றது. அப்படி பிரித்துக் கொடுத்ததன் பின் அதில் உரிமை கொண்டாட முடியாது. அது எனக்கு சொந்தம் என்று சொல்லிக் கொண் டிருக்க முடியாது. செட்டில் மென்ட் செய்துவிட்டால் அதற்குப்பின் அவ ருக்கு அதிலே எந்த பாத்தியத்தையும் இருக்காது. சரி இதை எப்படி செய்வது?

அது ஒன்றும் பெரிய காரியமில்லை. இப்படி செய்கின்றது என்று முடிவு செய்து விட்டால் அதை ஒரு ஸ்டாம்ப் பேப்பரிலே எழுத வேண்டும். பதிவு அலுவலகத்திலே பதிவு செய்து விட வேண்டும். அவ்வளவுதான் இது தான் செட்டில்மென்ட் . இப்படி செய்து விட்டால் அக்கடா என்று தலையிலே துண்டைப் போட்டுக் கொண்டு எங்கேயாவது ஒரு இடத்தைப் பார்த்து உட்கார்ந்து விடலாம் நிம்மதியாக. அதற்கு பின் சொத்தை யார் பேரிலே எழுதி வைத்தார்களோ அவராக மனது வைத்து சோறு போட்டால் அதையும் சாப்பிட்டுக் கொள்லாம். சரி இருக்கட்டும் உயில் என்றால் என்ன?

ஒருவர் தான் இறந்த பிறகு தன்னுடைய சொத்து யார் யாருக்கு போய்ச் சேரவேண்டும் என்று எழுதி வைப்பது இருக்கு பாருங்கள் அது தான் உயில். அதாவது உயிரோடு இருக்கின்றபோதே பிரித்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வது செட்டில்மென்ட். இறந்து போனதற்குபின் பிரித்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வது உயில். செட்டில்மன்ட் என்றால் பத்திரத்திலே எழுதி பதிவு செய்ய வேண்டி இருக்கின்றது உயிலிற்கு அப்படி அவசியமில்லை. இதை பதிவு செய்ய வேண்டியதில்லை. பத்திரத்திலேயும் எழுத வேண்டியதில்லை. சாதாரண ஒரு வெள்ளைப் பேப்பரிலே எழுதினால் கூடப்போதும். இரண்டு பேரை சாட்சிக் கையெழுத்து போடச் சொல்லவேண்டும் அவ்வளவும் தான்.

இந்த உயில் எழுதுகின்ற விடயத்திலே சட்டம் ஏன் இவ்வளவு சலுகை காட்டுகின்றது. ஒரு மனிதாபிமானம் தான் வேறு என்ன. இறக்கப் போகின்ற மனிதன் கடைசி ஆசையாக இந்த உயில் எழுதுகின்றான். அந்த நேரத்திலே அவனிடம் போய் இதை ஸ்டாம் பேப்பரிலே எழுதி பதிவு அலுவலகத்திற்கு எடுத்துக் கொண்டு போ என்று எல்லாம் சொல்லிக் கொண்டிருந்தால் அது நல்லா இருக்குமா? எமன் எப்போது வந்து அழைத்துக் கொண்டு போகலாம் என்று நேரம் பார்த்துக் கொண்டிருக்கின்ற நேரத்திலே எழுந்துவா பதிவு அலுவலகம் வரைக்கும் போய் வந்துவிடுவோம் என்று கூப்பிட்டால் அது முடிகின்ற காரியமா? இதையெல்லாம் யோசித்து தான் சட்டம் இந்த சலுகை கொடுக்கின்றது.

உயில், செட்டில்மென்ட் அது மாதிரியே வாரிசு இல்லாத ஒருவருக்கு தானப் பத்திரமாகவும் ஒருவர் தன்னுடைய சொத்தை எழுதி வைக்கலாம். இது தான் விபரம். இப்படி நான் சொல்லிக் கொண்டிருந்த கட்டத்திலே எதிரிலே இருந்த பெரியவர் கொஞ்சம் நிமிர்ந்து உட்கார்ந்தார். நான் அவரைப் பார்த்து சார் நீங்கள் கேட்ட விபரத்தை சொல்லிவிட்டேன். உங்கள் பிரச்சினை என்ன என்பதை நேரடியாக சொல்லி விட்டீர்கள் என்றால் அதற்கு பரிகாரம் தேடலாம். உயில் எழுதுவதிலே ஏதும் சிக்கலா என்று கேட்டேன்.

அதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை. அது எல்லாம் எழுதி விட்டேன். பத்து லட்சம் பெறுமதியான சொத்துக்களை எப்படி பிரிக்கின்றது என்று என் பிள்ளைகளிற்கு ஏற்கனவே எழுதி வைத்து விட்டேன் என்றார். அப்படி என்றால் அதற்குப் பின் என்ன கவலை உங்களுக்கு என்றேன். அந்த பத்து லட்சம் பெறுமதியுள்ள சொத்தை எப்படி சம்பாதிப்பது என்று யோசனை செய்துகொண்டிருக்கிறேன். அதற்குத்தான் உங்களிடம் ஐடியா கேட்க வந்தேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிநீர் நெருக்கடியால் அவதியுறும் கல்லாறு மக்கள்

**(தருமபுரம்)**

**கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக் உட்பட்ட கல்லாறு கிராமத்தில் 250 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்ற நிலையில் குடிநீரை பெற்றுக்கொள்வதில் மக்கள் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.**

குறித்த பகுதியில் நீர் நிலைகளில் நீர் உவநீராக காணப்படுகின்ற நிலையில் குடிநீரை வழங்கும் பொருட்டு பிரமந்தனாறு கல்லாறு குடிநீர்த்திட்டம் பிரமந்தன் பகுதியில் நீர்த்தாங்கி மூலம் கல்லாறு கிராமத்திற்கு நீரை வழங்கி வந்த நிலையில் குறித்த நீர் வழங்கல் பல நாட் களாக செயலிழந்து காணப்படுகின்றது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை மூலம் தமக்கு நிலையான நீர் விநியோகத்தை வழங்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-316)

## காற்றுடன் கூடிய காலநிலை

# முறிந்து விழும் மரங்களால் பயணிகளுக்கு ஆபத்து

(முல்லைத்தீவு)

அளம்பிலிலிருந்து குமுழமுனை செல்லும் பிரதான வீதியின் அருகே இருந்த பாரிய மரமொன்று நேற்று அதிகாலை வீதிக்கு குறுக்கே விழுந்ததால் பல மணிநேரம் போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.



அளம்பிலிலுள்ள 10 ஆவது சிங்கரெஜிமன்ட் படையணியைச் சேர்ந்த இராணுவத்தினரால் துப்பரவு செய்யப்பட்டு பின்னர் போக்குவரத்து மீண்டும் சீர்செய்யப்பட்டிருந்தது.

தற்போது வீசும் காற்றினால் மரங்களின் கிளைகள் அவ்வப்போது முறிந்து விழுவதாகவும் இது வீதியில் பயணம் செய்யும் மக்களுக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தும்.

எனவே இந்த மரங்களை அகற்றுவதற்கு அல்லது கிளைகளைச் சீர் செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (நி-299)

# கால்நடைகளின் உறைவிடமான சந்தைக் கட்டடம்



(அக்கராயன்)

முல்லைத்தீவு ஐயன்கன் குள கிராமத்தில் உள்ளூர் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யக் கூடிய சந்தை அமைக்கப்பட்டது.

சந்தை கட்டடம் அமைக்கப்பட்ட நாளில் இருந்து இது வரை சந்தை இயங்காமல் கால் நடைகளின் உறைவிடமாக காணப்படுகின்றது.

இக்கட்டடத்தின் தக ரங்கள் கூட தற்போது காற்றினால் பிடுங்கி எறியப்பட்டுள்ளது.

இதனை இயக்குவதற்கு அதிகாரிகள் இறுக்கமான நடவடிக்கைகள் எடுக்கவில்லை எனவும் கிராம மக்கள் கவலை தெரிவித்தனர். (நி-350)

## தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

தெய்வீக இசையரங்கு நிகழ்வில் பங்குபற்றவுள்ள கலைஞர்கள் இளங் கலைஞர் மன்றத்தில் விண்ணப்படிவத்தைப் பெற்று இம் மாதம் 29 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் ஒப்படைக்குமாறு இளங் கலைஞர் மன்ற செயளாளர் அறிவித்துள்ளார். (நி)

# மயக்க மருந்தை பயன்படுத்தி திருடர்கள் கைவரிசை

## சந்தேகத்தில் இருவர் கைது

(முல்லைத்தீவு)

முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை இரு வீடுகள் உடைக்கப்பட்டு இடம் பெற்ற திருட்டுச் சம்ப வம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த சம்பவத்தில் இரு வீடுகளை குறிவைத்து அவற்றின் யன்னல்களை உடைத்து வீட்டின் உள்ளே நுழைந்த திருடர்கள், உறக்கத்தில் இருந் தவர்களுக்கு மயக்க மருந்து கொடுத்து மயக்கத்தில் ஆழ்த்தியுள்ளனர்.

1/2 பவுண் தோடு மற்றும் 170,000 ரூபாய் பணம் என்பனவற்றை திருடர்கள் திருடி சென்றுள்ளனர்.

காலை எழுந்த பின்னரே திருடப்பட்ட சம்பவம் வீட்டாருக் தெரியவந்துள்ளது.

முல்லைத்தீவு பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்ட தனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர். இதற்கமைய சந்தேகத்தின் பேரில் இரு நபர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர்.

முல்லைத்தீவு பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை முன்னெ டுத்துள்ளனர். குறித்த திருட் டுச் சம்பவம் முள்ளி வாய்க்கால் கிழக்குப் பகுதியில் சற்றுப் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. (நி-299)

# மேய்ச்சல் தரவை இன்மையால் கால்நடை வளர்ப்பாளர்கள் தவிப்பு

(அக்கராயன்)

முல்லைத்தீவு அம்பலப் பெரு மாள்குளம் கிராம கால்நடை வளர்ப்பாளர்கள் மேய்ச்சல் தரவை இன்மையினால் நெருக்கடிகளை எதிர் கொண்டு வருகின்றனர்.

2009 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் முதலாவது மீள் குடியேற்றம் துணுக்காய்ப் பிரதேச செயலாளர் பிரிவிலேயே இடம்பெற்றது. அக்காலத்தில் இருந்து துணுக்காய்ப் பிரதேச செயலகத்தில் நடை பெறுகின்ற கூட்டங்களில் அம்பலப்பெருமாள் குளத்தில் கால் நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்துவதற்கான மேய்ச்சல் தரவை நிலத்தினை இனங்காட்டுமாறு தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வரும் நிலையிலும் இது வரை மேய்ச்சல் தரவைக்கான இடம் இனங் காட்டப்படவில்லை.

இதன் காரணமாக கால் நடை வளர்ப்பாளர்கள் தமது கால் நடைகளை மேய்ச்சலில் ஈடுப டுத்து வதில் நெருக்கடிகளை எதிர் நோக்கியுள்ளனர். (நி-6-350)

# போசாக்கு குறைபாடு சிறுவர்களிடையே அதிகரிப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சிறார்கள் மத்தியில் போசாக்குப் பிரச்சினை அதிகளவில் காணப்ப டுவதாக கிளிநொச்சி மத்திய கல்லூரியின் உப அதிபர் பரராசசிங்கம் சசிறதன் தெரிவித்தார்.

கிளிநொச்சி உதயநகர் றொசான் முன்பள்ளி மழலைகளின் விளையாட்டு விழா நேற்று நடைபெற்றபோது நிகழ்வின் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது. பாடசாலைகளுக்கு வருகின்ற மாணவர்களிடையே வெளிப்படையாக போசாக்கு பிரச்சினை தெரிகின்றன.

சிறார்களுக்கான உணவுகளை பெற்றோர்கள் சரியான முறையில் தெரிவு செய்யாததே முக்கிய காரணம். அவசரத்தில் நூடில்ஸ், பணிஸ் போன்ற உணவுகளை தமது பிள்ளைகளுக்கு வழங்குவதன் மூலம் சத்தான உணவு கிடைப்பதாக பெற்றோர்கள் நினைக்கின்றார்கள்.

இவ் உணவுகளில் சத்துகள் இல்லை. நாம் சரியான உணவுகளை பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும். உணவில் முருங்கை இலை போன்ற இலை வகைகளை பயன்படுத்த வேண்டும்.

20 ஆண்டுகளுக்கு முன்னர் எமது சூழலில் கிடைத்த சத்தான உணவு களை பிள்ளை கள் பெற்ற போது சத்து பிரச்சினை பிள்ளைகளுக்கு இருந்ததில்லை.

தற்போது பெற்றோர்கள் வீட்டில் உணவுகளை தயாரிக்காமல் உண வகங் களை நாடு வதனால் சத் தான உணவுகள் பிள்ளை களை சென்றடைவதில்லை எனவும் தெரிவித்தார். (நி-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் — பாகம் - 3 — 537





ரவிதாஸனுக்கு அளவில்லாத கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

"பெண்ணே! என்னை ஏமாற்றலாம் என்று பார்க்கிறாயா!" என்று கர்ஜித்தான்.

"உன்னை எதற்காக நான் ஏமாற்ற வேண்டும்?"

"இளவரசரும் வல்லவரையனும் இருக்குமிடத்தைக் காட்டுகிறேன் என்று சொல்லி நீ என்னை இழுத்து அடிக்கவில்லையா?"

"அவர்கள் இறந்து விட்டார்கள் என்று நான் சொன்னதை நீ நம்பவில்லை. வேறு என்ன செய்யட்டும்?"

"இளவரசர் இறந்தது உண்மைதானா? ஆணையிட்டுச் சொல்வாயா?"

"ஆணை எதற்கு! அதோ ஆகாசத்தைப் பார்!"

ரவிதாஸன் வானத்தை நோக்கினான். வால் நட்சத்திரம் தெரிந்தது.

"வால் நட்சத்திரம் தோன்றினால் அரச குலத்தில் மரணம் என்று உனக்குத் தெரியாதா? அப்படியே நடந்து விட்டது!" என்றாள் பூங்குழலி.

"பெண்ணே! அப்படியானால் உன் கையில் உள்ள கெண்டியை இப்படிக் கொடு அதில் ஏதாவது மிச்சம் இருக்கிறதா உன்னோடு ஓடி வந்ததில் எனக்குத் தாகம் எடுத்து விட்டது!"

பூங்குழலி திடீரென்று மறுபடி ஓட்டம் பிடித்தாள். மேட்டிலிருந்து தாவிக் குதித்து இறங்கிக் கொள்ளி வாய்ப் பிசாசுகள் தோன்றி மறைந்த சதுப்பு நிலப் பரப்பை நோக்கி ஓடினாள். ரவிதாஸன் ஆத்திரத்தினால் அறிவை இழந்தான். பூங்குழலியைப் பிடித்து அவளுடைய கழுத்தை நெரித்துக் கொன்று விடவேண்டும் என்று வெறியை அடைந்தான். தலைகால் தெரியாமல் அவளைப் பின் தொடர்ந்து ஓடினான்.

சிறிது தூரம் ஓடிய பிறகு பூங்குழலி சட்டென்று கொஞ்சம் குனிந்து நாலைந்தடி ஒரு புறமாக நகர்ந்து கொண்டாள். அதிக வேகமாக அவளைத் துரத்தி வந்த ரவிதாஸனால் அவள் நின்ற இடத்தில் நிற்க முடியவில்லை. அவளுக்கு அப்பால் சில அடி தூரம் வரையில் சென்று நின்றான். திரும்பி அவளைப் பிடிப்பதற்காகப் பாயப் பார்த்தான் ஆனால் முடியவில்லை. கால்களுக்குத் திடீரென்று என்ன நேர்ந்து விட்டது? அவை ஏன் இப்பொழுது நகரவில்லை? அவை ஏன் சில்விட்டிருக்கின்றன?

இது என்ன? உள்ளங்காலிலிருந்து சில்லிப்பு மேலே மேலே வந்து கொண்டிருக்கிறதே? இல்லை, இல்லை! கால்கள் அல்லவா கீழே கீழே போய்க் கொண்டிருக்கின்றன! ரவிதாஸன் குனிந்து பார்த்தான். ஆம், அவனுடைய கால்கள் கீழே புதை சேற்றில் அமிழ்ந்து கொண்டிருப்பதைக் கண்டான். ஒவ்வொரு அணுவாக, ஒவ்வொரு அங்குலமாக, அவன் கால்கள் கீழே சேற்றில் மெதுவாகப் புதைந்து கொண்டிருந்தன.

ரவிதாஸன் தன்னுடைய அபாய நிலையை உணர்ந்தான் சேற்றிலிருந்து வெளிவர முயன்றான். கால்களை உதறி எடுக்கப் பிரயத்தனம் செய்தான். அவனுடைய பிரயத்தனம் பலன் தரவில்லை.

கீழே சேற்றுக்கடியில் ஏதோ ஒரு பூதம் இருந்து அவனைப் பற்றி இழுப்பது போலத் தோன்றியது. பூங்குழலி கலகலவென்று சிரித்தாள்.

"மந்திரவாதி! என்ன விழிக்கிறாய்? பூதத்தின் வாயில் அகப்பட்டுக் கொண்டாயா? மந்திரம் போட்டுப் பார்ப்பது தானே?" என்றாள்.

மந்திரவாதி ஒரு பக்கம் பீதியினாலும் மறுபக்கம் கோபத்தினாலும் நடு நடுங்கினான். "அடி பாவி! உன் வேலையா இது?" என்று கையை நெரித்தான். "என் கழுத்தைப் பிடித்து நெரிக்க வேண்டுமென்று நீ ஆசைப் பட்டாயல்லவா? அதற்குப் பதிலாக கையை நெரித்துக் கொள்!" என்றாள்.

(தொடரும்)

## சிறுவர் அரங்கம்



### சிங்கத்தை ஓடவிட்ட குரங்கு



செண்பகக் காட்டில் கடந்த ஒரு வாரமாக விலங்குகள் அனைத்தும் கவலையோடு இருந்தன. காரணம், சிங்கராஜா குகையை விட்டு வெளியே வரவே இல்லை.

மலைப் பகுதியைச் சுற்றிப் பார்க்கச் சென்ற சிங்கம், கூழாங்கல் மீது கால் வைத்தபோது சுளுக்கிக்கொண்டது.

சிங்கத்தால் காலை ஊன்றக்கூட முடியவில்லை. வலியால் துடித்தது. தத்தித் தத்தி குகைக்குள் வந்து படுத்துக் கொண்டது.

தங்கள் ராஜா இப்படிப் படுத்தே கிடப்பது மற்ற விலங்குகளுக்குத் வருத்தமாக இருந்தது. காட்டு மருத்துவர் கரடி பச்சிலைச் சாற்றைச் சுளுக்கின் மீது தடவியது. வலி பொறுக்க முடியாத சிங்கம் கோபத்தில் கரடியை விரட்டியது.

அடுத்து புலி தனக்குத் தெரிந்த மருந்தை எடுத்துக்கொண்டு வந்தது. சிங்கத்தால் வலியைத்தாங்க முடியவில்லை. புலியை ஓங்கி உதை விட்டது. தப்பித்தால் போதுமென்று ஓடியது புலி.

"கால் சுளுக்கைக் குணமாக்க வேண்டும் என்று நாம் மருத்துவம் செய்யப் போறோம். ஆனால், ராஜா இப்படி நம்மை அடித்து விரட்டுகிறாரே" என்று கரடியும் புலியும் பேசிக் கொண்டன.

"ராஜா இப்படி மருத்துவம் செய்ய மறுத்தால், எப்படிச் சுளுக்கு நீங்கும்?" என்று விலங்குகள் பேசிக்கொண்டன. இனி எழுந்து நடப்பது கடினம் தான் என்ற முடிவுக்கு வந்தன.

காட்டில் இருந்த புத்திசாலியான குரங்கு நடப்பதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தது. இதற்கு ஒரு முடிவு கட்டும் விதமாகச் சிங்கத்தின் குகை வாயிலுக்குச் சென்றது.

"ராஜா, உங்களால் எழுந்து நடக்க முடியவில்லையாமே? உங்களைக் கண்டதும் வணக்கம் சொல்லவில்லை என்றால் என் மீது எப்படிக் கோபப்படுவீர்கள்? இன்று நான் உங்களுக்கு வணக்கம் சொல்லவில்லை பார்த்தீர்களா?" என்று கேட்டது குரங்கு.

குரங்கு சொன்னதைக் கேட்டு சிங்கத்துக்குக் கோபம் வந்தது. அது படுத்தபடியே, "என்ன குரங்கே, வாய் ரொம்பவும் நீள்கிறது? உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று கர்ஜித்தது.

அதைக் கேட்டு குரங்கு சிரித்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன்? எதற்கு? எப்படி? எனும் கேள்விகளிலிருந்து விடுபடுவதே சூழ்நிலைகளை சுலபமாய்க் கையாளும் வழி. ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கடும் குழப்பத்தில் தென்பகுதி அரசியல்

எங்களிடம் தான் ஆன அரசியல் தலைமை இல்லை. திட்டமிடல் இல்லை. ஒற்றுமை இல்லை என்றெல்லாம் கவலை கொண்டால், இல்லை தென்பகுதியிலும் உருப்படியான அரசியல் இல்லை என்பது இப்போது நிரூபணமாகியுள்ளது.

ஆம், நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடக்கிறது.

எல்லா நாடுகளிடமும் கடன்பட்டு கந்தறு நிலையில் இருக்கக்கூடிய நாட்டை மீட்டெடுக்கின்ற எந்த முயற்சியும் தென்பகுதி அரசியலில் இல்லை.

மாறாக, சர்வதேச நாணய நிதியம், கால அட்டவணையின் பிரகாரம் வழங்குகின்ற கடன் தொகை மட்டுமே நாட்டைப் பொருளாதார மந்தத்தினின்றும் ஓரளவு காப்பாற்றி நிற்கிறது.

மற்றும்படி பொருளாதார அபிவிருத்தியை நோக்கிய எந்த முதலீடுகளும் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

அதேநேரம் பொருளாதார மந்தத்திலிருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டுமென்ற சிந்தனையும் அடியோடு இல்லாமல் போயுள்ளதை நாம் அவதானிக்க முடிகிறது.

உண்மை. நாடு; ஊழல் மோசடிகளாலும் போதை வர்த்தகத்தாலும் மிக மோசமான நிலையை எட்டியுள்ளது.

போதாக்குறைக்கு இப்போது தென்பகுதியில் இனந்தெரியாதோர் நடத்துகின்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் தலையெடுக்கத் தொடங்கியுள்ளன.

இருந்தும் தென்பகுதியில் உள்ள எந்த அரசியல் கட்சிகளுக்கும் நாடு பற்றிய கவலை இம்மியும் கிடையாது.

ஆம், தென்பகுதி அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரை ஜனாதிபதித் தேர்தல் பற்றிய நினைப்பைத் தவிர வேறு எதுவுமில்லை எனலாம்.

அதேநேரம் ஜனாதிபதித் தேர்தல் நடக்குமா? இல்லையா? என்ற சந்தேகம் இன்னமும் நீடித்துள்ளது.

இந்த ஐயம் எதற்கானது என்பது புரியவில்லை. அதாவது ஜனாதிபதித் தேர்தலை நடத்துவோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

தவிர, ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆயத்தப் பணிகளில் தேர்தல் திணைக்களம் மும்முரம் காட்டத் தொடங்கியுள்ளது.

இன்னும் ஓரிரு வாரங்களில் ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படும் என்ற தகவல் வெளிவந்துள்ள போதிலும் தேர்தலை நடத்தாமல் காலம் கடத்துகின்ற சதி நோக்கம் உள்ளதென்ற ஊகங்களின் அடிப்படையிலேயே ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது.

இங்குதான் ஜனாதிபதித் தேர்தலைத் தவிர, வேறு எதுவும் நாட்டில் பேசப்படவில்லை என்பதாக நிலைமை இருப்பது தெரிகிறது.

இதிலிருந்து தென்பகுதியிலும் ஆன அரசியல் தலைமை இல்லை என்ற உண்மை உணரக்கூடியதாகும்.

### சாவகச்சேரி வைத்தியசாலை விவகாரம்

# விளக்கம் கோரி கடிதம் அனுப்பிய மனித உரிமை ஆணைக்குழு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி வைத்தியசாலையில் கடந்த 17 ஆம் திகதி இரவு வெளிநோயாளர் பிரிவில் வைத்தியர்கள் , தாதியர்கள் இருக்கவில்லை என ஊடகங்களில் வெளியான செய்திகளின் அடிப்படையில் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ், வைத்தியசாலை அத்தியட்சகர் உள்ளிட்டோரிடம் விளக்கம் கோரியுள்ளார்.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் கடந்த 17ஆம் திகதி இரவு விசப்பூச்சியின் கடிக்குள்ளான தனது தந்தையினை சிகிச்சைக்காக கொண்டு சென்ற வேளையில் மருத்துவமனையில் இரவு வேளையில் மருத்துவர்களோ, தாதியர்களோ இருக்கவில்லை என்றும் யாரும் அங்கு இல்லாத காரணத்தினால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற வேண்டிய நிலை ஏற்பட்டு கொண்டதாகவும் ஊடகங்களில் செய்திகள் வெளிவந்தன.

செய்திகளின் அடிப்படையில், 1996 ஆம் ஆண்டு 21 இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 14 இற்கு அமைய ஆணைக்குழுவின் சொந்தப் பிரேரணையாக பதிவுசெய்யப்பட்டு சாவகச்சேரி ஆதார வைத்திசாலையின் பதில் மருத்துவ அத்தியட்சகர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் யாழ்ப்பாணம், மற்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வடக்கு மாகாணம் ஆகியோரிடம் விளக்கம் கோரி மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ் .பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் கடிதம் அனுப்பியுள்ளார்.

குறித்த விளக்க அறிக்கையை எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க பணிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தலைமையிலான குழுவினர் அவதானிப்பு விஜயம் ஒன்றை கடந்த 05ஆம் திகதி மேற்கொண்டிருந்தனர்.

அக்கள விஜயத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைகள் சார் பிரச்சனைகள் தொடர்பில் கடந்த 08ஆம் திகதி வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோருடன் கலந்துரையாடல் மனிதவுரிமை ஆணைக்குழுவின் காரியாலயத்தில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடல் தொடர்பான அறிக்கை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமைக் காரியாலயத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

அதன் அடுத்தகட்ட நடவடிக்கையாக, மத்திய மற்றும் மாகாண சுகாதார சேவை அதிகாரிகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கொழும்பு தலைமை காரியாலயத்தில் இடம்பெறவிருக்கும் விசேட கலந்துரையாடல் ஒன்றுக்கு எதிர்வரும் 30ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு வருமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அக்கலந்துரையாடலுக்கு 01. செயலாளர்-சுகாதார அமைச்சு, கொழும்பு 02.சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் - சுகாதார அமைச்சு, கொழும்பு 03.மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர்- வடக்கு மாகாணம் 04.மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்- வடக்கு மாகாணம் 05.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்- யாழ்ப்பாணம் 06.மருத்துவ அத்தியட்சகர்,சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை ஆகியோரை சமூகமளிக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7,30,33)

## ஒரு முட்டைமூலம் உற்பத்தியாளர்கள் 25 ரூபாய் இலாபம் பெறுகின்றனர்

### முட்டை வர்த்தக சங்கம் குற்றச்சாட்டு

ஒரு முட்டை மூலம் உற்பத்தியாளர்கள் 25 ரூபாய் நியாயமற்ற லாபம் பெறுவதாக முட்டை வர்த்தக சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இதேவேளை தற்போது ஒரு முட்டையை உற்பத்தி செய்வதற்கு சுமார் 20 ரூபா செலவாகும் என அதன் தலைவர் அனுர மாரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

பண்ணைகளில் இருந்து 45 ரூபா தொடக்கம் 50 ரூபா வரையிலான விலைக்கு மொத்த விற்பனையாளர்களுக்கு விற்கப்படுவதால் சந்தையில் முட்டை ஒன்றின் விலை தற்போது 50 ரூபாவைத் தாண்டியுள்ளதாகவும் அனுர மாரசிங்க சுட்டிக்காட்டினார். (ம-7)

## பொலனறுவை உள்ளூர் விமான நிலையத்தை

### சர்வதேச விமான நிலையமாக மாற்ற நடவடிக்கை

(பொலனறுவை)

பொலனறுவை- ஹிங்குரக்கொட உள்ளூர் விமான நிலையத்தைச் சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதற்கான நிர்மாணப் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பணிகளை விமானப் போக்குவரத்து மற்றும் கப்பற்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ஆரம்பித்து வைத்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில், நாட்டின் மத்திய பகுதியில் அமைந்துள்ள இந்த விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றியமைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இதற்காகக் கடந்த பாதீட்டில் 2 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதேவேளை ஹிங்குரக்கொட விமான நிலையம் இரண்டாம் உலகப் போர்க் காலப்பகுதியில் இங்கிலாந்தின் ரோயல் விமானப்படையின் பயன்பாட்டுக்காக நிர்மாணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பான வழக்கு

### 24ஆம் திகதி அறிவிக்கப்படும்

(கொழும்பு)

தேசபந்து தென்னக்கோனை பொலிஸ் மா அதிபராக நியமித்த ஜனாதிபதியின் தீர்மானத்தை இரத்துச் செய்யுமாறு கோரி, தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்கள் தொடர்பாக எதிர்வரும் 24 ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் சிவில் அமைப்புக்களினால் தாக்கல் செய்யப்பட்ட குறித்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள், நேற்று முன்தினம் உயர் நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதிமன்றம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

இதன் போது தேசபந்து தென்னக்கோன் பொலிஸ் மா அதிபராக கடமையாற்றுவதை தடுக்கும் வகையில் இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்படுமா? இல்லையா? என்பதும் அன்றைய தினம் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசைக் கண்டித்து ராமேஸ்வரத்தில் ஆர்ப்பாட்டம்

**(சென்னை)**

**இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தியும் கச்சத்தீவு பகுதியில் மீன் பிடிக்க அனுமதி பெற்று தர நடவடிக்கை எடுக்கக்கோரியும் 5 மாவட்ட மீனவர்கள் ராமேஸ்வரம் பேருந்து நிலையம் எதிரே நேற்று வெள்ளிக்கிழமை காலை கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.**

கண்டன ஆர்ப்பாட்டத்தில் 1000இற்கும் மேற்பட்ட மீனவர்கள் மற்றும் சட்ட மன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மீன்பிடி தடைக்காலம் முடிந்து மீன்பிடிக்க கடலுக்குச் சென்ற நிலையில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழகத்தைச் சேர்ந்த 74 மீனவர்களையும் 8 விசைப்படகுகளையும் 4 நாட்டுப் படகுகளையும் உடனடியாக விடுதலை செய்ய மத்திய அரசு இலங்கை அரசுக்கு அழுத்தம் தரக் கோரியும், முன்னதாக இலங்கை சிறையில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள 6 மீனவர்களையும் உடனடியாக விடுதலை செய்யக் கோரியும், கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு தற்போது வரை இலங்கை கடற்படை வசம் உள்ள தமிழகத்தைச் சேர்ந்த 170 இற்கு மேற்பட்ட விசைப் படகு மற்றும் நாட்டு படகுகளை உடனடியாக



விடுவிக்க வேண்டும் என்ற கோரி முன் வைத்துள்ளனர்.

கச்சத்தீவு பகுதியில் இந்திய இலங்கை மீனவர்கள் பிரச்சினை இன்றி மீன் பிடிக்க வழிவகை செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ராமநாதபுரம், தூத்துக்குடி, புதுக்கோட்டை, நாகை, தஞ்சை உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் கலந்து கொண்டு கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ராமேஸ்வரத்தில் நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டம் முதல் கட்டம் எனவும், தொடர்ந்து இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டால் தமிழகம் தழுவிய போராட்டங்கள் நடத்தப்படும் அத்துடன் இலங்கை சிறையில் நோய்வாய்ப்பட்டு இருக்கக்கூடிய ராமேஸ்வரம் மீனவர்கள் 3 பேருக்கு உரிய சிகிச்சை அளித்து விரைவில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மீனவர்கள் கோரிக்கை வைத்துள்ளனர். (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3173

**மதுஷன்**

உங்களுக்கே நியாமா படுதாங்க கடன் வேனுமான்னு அழகான பெண்களை விட்டு கேட்குறீர்கள்



கட்டலைனா மட்டும் முரட்டு ஆண்களை அனுப்புறீங்க

**ஜீவா**



என்னடா இன்னைக்கு உன் ப்ரெண்டு
வேலைக்கு வரல
ஹாஸ்பிட்டல்ல அட்மிட்
ஆயிருக்கான் சார்
நேத்து தான் அவன் ஒரு பொண்ணுகூட
வண்டியில போறத பாத்தேன்
நீங்களும் பாத்திட்டீங்களா
ஏன் என்னாச்சு
அவன் wife உம் பாத்துட்டாங்க

**அனோ**

நம்ம சொந்தக்காரங்க எல்லாம் ஹோம்தியேட்டர் மாதிரி



நாம ஒரு விஷயத்தை அவங்க கிட்ட சொன்னா அதை அப்படியே நாலா பிரிச்சு நாலு பக்கமும் சொல்லுவானுங்க

**சாருஜா**

மனைவியின் அன்பு கடல் அலை போன்றது



அது ஓயாமல் அடிச்சிட்டே தான் இருக்கும்

**கீர்த்தனா**

நைட்ல தூக்கம் வரலையா? போய் கண்ணாடி பாருங்கள் மயக்கமே வரும்



நோ நோ தப்பா நினைக்காதீங்க இது தான் அழகுல மயங்கி விழுறது

**நிதுஷா**

வேசம் போடும் உறவுகளுக்கு நடுவில் உண்மையான பாசம் தோற்றுத்தான் போகிறது



மானங்கெட்ட மனசுக்கு தான் தெரியவில்லை அது பாசம் அல்ல வேசம் என்று

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

திடீர் என்று உடைந்து வீழ்ந்தது.

குறிப்பாக வீட்டின் பின்பக்கச் சுவர் மற்றும் கூரைப் பகுதி என்பன முற்றாக உடைந்து வீழ்ந்தது.

இருப்பினும் கணவனும் மனைவியும் வீட்டிற்கு வெளியில் இருந்தமையால் பாரிய அனர்த்தம் ஒன்று தவிர்க்கப்பட்டது. (ம-7,250)

## யாழிலிருந்து...

யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலை ஊடாக கதிர்காமம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த பேருந்து திருகோணமலையில் விபத்துக்குள்ளானதில் 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியில் பயணித்துக் கொண்டிருந்த பேருந்து கெங்கத்துறை பாலத்திற்கு அருகில் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்திற்குள் தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

அதில் பேருந்தில் பயணித்த 50க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்த நிலையில் மூதூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

## விபரீத முடிவெடு...

பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த அன்ரன் ஜெயபாலா உதயசந்திரிக்கா (வயது-48) என்ற 5 பிள்ளைகளின் தாயே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

உயிரிழந்த குறித்த தாய், மகள் நடன பாடச் செய்முறை பரீட்சைக்கு செல்லாவிட்டால் தான் மண்ணெண்ணெய் ஊற்றி எரிவேன் என தெரிவித்து தனது உடலில் மண்ணெண்ணெய்யை ஊற்றினார்.

அதன்பின்னர் தீக்குச்சியை பற்ற வைத்த நிலையில் மகளிடம் பேசிக் கொண்டு இருந்தவேளை திடீரென அவரது ஆடையில் தீப்பற்றி எரிய ஆரம்பித்தது. இந்தச் சம்பவம் கடந்த 10ஆம் திகதி இடம்பெற்றது.

இந்நிலையில் அவர் மீது பரவிய தீ அணைக்கப்பட்டு தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார்.

பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி நேற்றைய தினம் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7)

## பசு மாட்டை...

வெள்ளிக்கிழமை ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனையில் இடம்பெற்றது.

அனுமதியின்றி மாடு வெட்டுவதாக சுகாதார வைத்திய அதிகாரிக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

அவர் இத்தகவலை ஊர்காவற்றுறை தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு தெரிவித்து பொலிஸாரின் உதவியைக் கோரியுள்ளார்.

சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் இரு பொலிஸார், சிரேஷ்ட பொதுச்சுகாதாரப்பரிசோதகர்ப.ஜோழன், பொதுச் சுகாதார பரிசோதகர் யோ.வசிகரன் ஆகியோர் சம்பவ மெலிஞ்சிமுனையில் மாடு வெட்டப்பட்ட இடத்திற்குச் சென்றனர்.

அங்குள்ள வீடொன்றில் பசு மாட்டை வெட்டி இறைச்சியாக்கி சமைத்துக் கொண்டிருந்தமை தெரிய வந்தது. மற்றொரு காளை மாடு வெட்டுவதற்கு தயாராக கட்டிவைக்கப்பட்டிருந்தது. நிகழ்வொன்றுக்காக தாம் மாட்டை வெட்டியதாக அங்குள்ளவர்கள் தெரிவித்தனர்.

எனினும் மாடு வெட்டுவதற்கான அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. இதையடுத்து மாட்டை வெட்டிய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். மாடும் மீட்கப்பட்டது. வெட்டப்பட்ட பசு மாட்டின் 10 கிலோகிராம் வரையான இறைச்சியும் கைப்பற்றப்பட்டது. (ம-7)

## இந்தியாவின்...

சுற்றுலா சொகுசுக் கப்பல் ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை காலை ஆறு மணியளவில் காங்கேசன்துறை முகத்தை வந்தடைந்துள்ளது.

800க்கும் மேற்பட்ட பயணிகளை ஏற்றியவாறு குறித்த கப்பலானது யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை முகத்தை வந்தடைந்தது.

குறித்த கப்பலானது இரு நாட்களுக்கு முன் அம்பாந்தோட்டையை வந்தடைந்தது. அங்கிருந்து பயணத்தை ஆரம்பித்து நேற்று முன்தினம் திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்நிலையில் நேற்று யாழ்ப்பாணம் - காங்கேசன் துறைமுகத்தை வந்தடைந்தது. (ம-7)

## தம்பாப்பிள்ளை...

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் தமிழீழ விடுதலை இராணுவம் என்ற ஆயுதப் போராட்ட அமைப்பை உருவாக்கிய தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் வெளிநாடொன்றில் நேற்றுக் காலமானார்.

பனாகொட மகேஸ்வரன் என்று அழைக்கப்பட்ட தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் யாழ்ப்பாணக் கோட்டை மீது எறிகணைத் தாக்குதலை நடத்தியவர்.

இவர் பனாகொட, வெலிக்கடை, செங்கலபட்டு தன்சானியா ஆகிய சிறைகளில் சுமார் 20 ஆண்டுகளுக்கு மேல் அடைபட்டிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ஒரே...

நேற்று துல்கல கண்டவ ஊடாக நாரங்கல வீதியைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில், 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஜனாதிபதித்தேர்தலை நடத்துவதற்காக பத்து பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் பிரகாரம் ஒக்ரோபர் 17ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி ஜனாதிபதியை தெரிவு செய்ய வேண்டும்.

இந்த ஆண்டு வேறு எந்த தேர்தல்களும் நடத்தப்படாது, ஜனாதிபதி தேர்தல் மட்டுமே நடத்தப்படும் என்றார். (ம-7)

## ரணில்...

அரசியலமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டமூலம் ஜனாதிபதியின் பணிப்புக்கமைய வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் அரசியலமைப்பின் ஏற்பாட்டில் காணப்படும் குறைபாட்டை திருத்தும் வகையில் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது.

ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் வரை 22ஆவது திருத்தச் சட்டமூலத்தை வர்த்தமானி அறிவித்தலில் வெளியிட வேண்டாம் என தான் நீதியமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஊடகங்களுக்கு குறிப்பிட்டிருந்த நிலையில் ஜனாதிபதியின் பணிப்புக்கு அமைய சட்டமூலம் வெள்ளிக்கிழமை வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கும் ஜனாதிபதி ரணிலுக்கும் இடையே முறுகல் நிலை காணப்படுவது தென்படுகின்றது.(ம-7)

### மஹஜன சம்பத

திகதி 2024.07.19 — சீட்டிழுப்பு இலக்கம் 5539

P 3 8 0 7 9 1

அத சம்பத: P 0 7 9 1 — சீட்டிழுப்பு இலக்கம் 114

### தன நிதானய

திகதி - 2024.07.19 — சீட்டிழுப்பு இலக்கம் - 1569

B 03 34 41 53 B — Double Chance 06519

### மெகா பவர்

திகதி 19/07/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1887

U 03 13 53 60 61 — Double Chance 08484

### லக்கி 7 VIP

திகதி 2024.07.19 — சீட்டிழுப்பு இலக்கம் 365

F 6 4 5 1 5 5 F

### கொவிசெத

சீட்டிழுப்பு இலக்கம் 3781 — சீட்டிழுப்பு திகதி 19.07.2024

Y 04 24 36 55 — Y 36806

### ஹந்தஹன (HANDAHANA)

உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.07.19 — சீட்டிழுப்பு இலக்கம் 0848

கடகம் 21 29 36 61 கடகம் — 44622 — 09

### சுப்பிர் தன சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள் — 19.07.2024 — வெற்றி வாரம் 247

G 6 6 2 0 6 0 — 35403

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,937,944.00

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 2513 — வர்ணம் இளஞ்சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 19.07.2024 — தினம் வெள்ளி

19 21 39 60 W

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 99,755,689.60

### சனிதா

திகதி 2024.07.19 — வெற்றி வாரம் 4674

25 32 40 59 F

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,690,551.60 — 28487

### சசிரி

வெற்றி வாரம் 504 — சீட்டிழுப்பு திகதி 2024.07.19 — பச்சை

09 21 23 — 07

வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,732,080/-

### ராசி

சீட்டிழுப்பு வாரம் 4225 — வர்ணம் கரும் நீலம் — சீட்டிழுப்பு திகதி 2024.07.19 — தினம் வெள்ளிக்கிழமை

31 39 57 61 கும்பம்

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,111,740.00 — 129049

### ஜய

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்

S 26 15 36 49 55

சீட்டிழுப்பு வாரம் 1689 — இள கபில — 19.07.2024 வெள்ளி

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 534,104,334.60

### அத கோட்டிபதி (ADA KOTIPATHI)

வெள்ளிக்கிழமை — வெற்றி வாரம் : 2339 — சீட்டிழுப்பு திகதி : 2024.07.19

18 24 42 50 K — 563392

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,868,317.60

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி A9 வீதி முகப்புடன்
10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

* 1 பரப்பின் விலை - 15,00,000/= (15 இலட்சம்)
* நல்ல சூழல்.
* தரகர் தேவையில்லை.
* நாவற்குழி சந்தி ½ Km தூரம்.
* யாழ்ப்பாணத்திலிருந்து 3½ Km தூரம்.
* அன்ட்ரூஸ் கம்பனிக்கு அருகாமை.

(1516)

தொடர்புகளுக்கு:-
076 755 8606, 077 129 4999



# Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 248/= | (Max)3Kg |
| 1 Kg Prima கோதுமை மா | - 169/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 282/= | |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 395/= | |
| 1 Kg சம்பா | - 230/= | |
| 1 Kg றவை | - 286/= | |
| 1 L மரக்கறி எண்ணெய் | - 680/= | |
| 70 g பேபி சோப் | - 115/= | ~~145/=~~ |
| 1 Kg சன்லைட் றோஸ் பவுடர் | - 310/= | ~~380/=~~ |
| 400 g நெஸ்டமோல்ட் | - 729/= | ~~780/=~~ |
| 750 g சுபோஷா சத்துமா | - 560/= | ~~590/=~~ |
| 500 ml விம் Liquid | - 310/= | ~~375/=~~ |
| 01 சந்தூர் சவர்க்காரம் | - 145/= | ~~175/=~~ |
| 01 கற்பூரப் பெட்டி | - 250/= | ~~340/=~~ |
| 400 g வட்டவல தேயிலை | - 999/= | ~~1140/=~~ |
| 01 Fortune சோயா | - 100/= | ~~165/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 54/= | ~~80/=~~ |

450g Anchor
1075/=




~~1110/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.
(171)
Happy Supermarket
0777 8080 30



# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில்
55 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

* A32 பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் (2வது காணி)
* 20 அடிப் பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
* குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
* நன்னீர் ஊற்றுச் சூழல், கட்டுக் கிணறு உள்ளது.
* ஒரு பரப்பின் விலை 5½ இலட்சம் (550,000/=)
* தரகர் தேவையில்லை.
* பார்வையிடும் நேரம் (காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை)

(1513)

தொடர்புகளுக்கு:- ஜெயம்
077 814 7389
077 986 5457


## ஜனாதிபதி...

ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜூலை 17ம் திகதி தேர்தலை அறிவிக்கும் நிலையில் தான் இருக்கவில்லை என தெரிவித்துள்ள அவர் செப்டம்பர் 17ம் திகதி அதாவது அதிகாரம் வழங்கப்பட்ட முதல்நாள் அன்று நான் தேர்தலிற்கான அறிவிப்பை வழங்கியிருந்தால் செப்டம்பர் 17 ம் திகதி தேர்தலை நடத்தியிருக்க வேண்டும், அன்றைய தினம் போயா என்பதால் அது சாத்தியமில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

கலாச்சார காரணங்களிற்காக தேர்தலை போயா தினத்தன்று நடத்த முடியாது என தெரிவித்துள்ள அவர் மறுநாள் அதனை நடத்துவது சாத்தியம் இல்லை என குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக வேட்பு மனு தாக்கல் செய்யும் தினத்தை அடுத்தவாரம் அறிவிப் பதன் மூலம் ஜனாதிபதி தேர்தலை அடுத் தவாரம் அறிவிக்கவுள்ளதாக என அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## அரச...

வெளியான பின்னர் நாட்டில் நடைமுறையிலுள்ள தேர்தல் சட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு அரச உத்தியோகத்தரும் செயற்பட வேண்டும் என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

சட்டத்தை உரிய முறையில் கடைப்பிடிக்காது சில அதிகாரிகள் செயற்படுவதால் அங்கு மக்களின் மனித உரிமைகள் மீறப்படுவதாக நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டுள்ளார். (ம-7)


# விற்பனைக்கு

yamaha mate 90, CM 125(honda)
வோக்ஸ்வகன் (Volkswagen )
VW 1300 8 ஸ்ரீ கார்
யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு
உள்ளது.
(1517)

தொடர்புகளுக்கு:
077 773 0567



# கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

STUDY IN UK & WORK VISA

ஆங்கில பயிற்சியுடன் கூடிய வெளிநாட்டு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு

நேரடியாக வருகைதந்து இலவச ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள
வெற்றிகரமான 13 வருட சேவையில்

WEC COLLEGE
புதிய உயர்கல்லூரி வளாகம்
ஆரியகுளம்,யாழ்ப்பாணம்
0779265447/0776421264
0212050988,0217200989
கிளை: சங்கத்தானை,சாவகச்சேரி (1512)



# விற்பனைக்கு உண்டு

Toyota CHR GT (CBG xxxx)
(2018) வாகனம்
யாழ்ப்பாணத்தில்
விற்பனைக்கு உண்டு.
(1515)

தொடர்பு:
076 693 2227



# வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான
விசாவினை உறுதிப்படுத்திக்
கொள்ள குறைந்த கட்டணத்தில்
வங்கி மீதி வசதிகள்
(157)

தொடர்புகளுக்கு:
074 17 37 684



அனைத்து நாடுகளுக்குமான
விமான பயணச்சீட்டுக்கள்
குறைந்த விலையில்

* Air Ticket Date Change
* Online Visa Appoinments
* Sri Lanka Visa Extension
* All Country Visa Services
* Travel Insurance
* Travel Itinerary

(C-0824)



உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்

கொழும்பு| மட்டக்களப்பு |திருகோணமலை|கிளிநொச்சி
புதுக்குடியிருப்பு |கொடிகாமம் |சாவகச்சேரி |புத்தூர்
யாழ்ப்பாணம் |நாச்சிமார் கோவிலடி |பண்டத்தரிப்பு
சுன்னாகம் |மானிப்பாய் |சங்கானை |கோப்பாய்
நெல்லியடி |பருத்தித்துறை |வல்வெட்டித்துறை

V2 TRAVELS 0768226240 0768226241



# வேலையாள் தேவை

உணவகம் ஒன்றிற்கு
உதவியாளர் தேவை.
(173)
075 509 0540



# பற்சிகிச்சை

நிரந்தர பல்கட்டுதல் (implant), "கிளிப்" போடுதல்
மற்றும் அனைத்து நவீன சிகிச்சைகளும்

கம்சியா
பற் சிகிச்சைப் பிரிவில்
(யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக, Singer
Company அருகில்) நடைபெறுகிறது.
578/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(C-0823)

077 375 4490
077 220 2769



# கடா ஆடு விற்பனைக்குண்டு

உரும்பிராயில் சணல்
இன கடா ஆடு
விற்பனைக்குண்டு
(1509)

தொடர்பு:
077 689 4344



Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை
பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள
நிரந்தரகுடியுரிமையுடனான 15'000
Care Giver வாய்ப்புக்களுக்கான
சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன்
Care Giver கற்கை நெறி மற்றும்
Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)



(C-0824)
CIMS College
49A, Chapel Street,Jaffna.
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322



V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்

* Student Visas
* Online Appointments
* இந்தியா Visas
* Online Visas- All countries
* Police Clearance
* Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0824)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.